விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 02 புதன்கிழமை (18.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 242

## புலிகள் சக்தி மிக்கவர்கள்; வன்னியில் அமைப்பது இராணுவ தங்குமிடம்

# இன்னமும் அடையாளம் காணப்படாத புலி ஆதரவாளர்களால் ஆபத்து!

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய சாட்சியம்

(கொழும்பு)

அரசிடம் சரணடையாத, அடையாளம் காணப்படாத விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் ஆபத்தானவர்கள் என்று தாம் கருதுவதாக பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார். இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றவை குறித்து விசாரித்து வரும் படிப்பினை மற்றும் நல்லிணக்க ஆணையத்தின் முன்பு நேற்று கொழும்பில் சாட்சியமளித்த போதே இவ்வாறு கூறியுள்ளார். (18ஆம் பக்கம் பார்க்க)




## மனிக் பாம் முகாமில் உள்ள மக்கள் ஒருநாள் அவகாசத்தில் இடமாற்றம்

## செய்வதறியாது அவர்கள் திண்டாட்டம்

(வவுனியா)

போரினால் இடம் பெயர்ந்த மக்களுக்கான வவுனியா மனிக்பாம் முகாம் நான்காம் வலயத்தில் தங்கியுள்ள சுமார் ஐயாயிரம் பேரை இன்று புதன்கிழமை காலை அருகிலுள்ள கதிர்காமர் முகாமுக்கு மாற்றப்போவதாக நேற்று இராணுவம் அறிவித்துள்ளது.

அந்த முகாமிலுள்ள மக்கள் இந்தத் தகவலை தனக்கு தொலைபேசி மூலம் தெரிவித்ததாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உடனடியாக இடமாற்றம் செய்யப்படுவதால் தங்களுக்கு பலவிதமான சிரமங்கள் ஏற்படும் (18ஆம் பக்கம் பார்க்க)

## முப்படைக் குழு இலங்கைக்கு வருகை

(கொழும்பு)

இலங்கையில் மனிதாபிமான சேவைகளை மேற்கொள்ளும் நோக்கில் அமெரிக்க முப்படையினர் குழு ஒன்று ஆறு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் வான், கடல், தரை மற்றும் பொதுச் சுகாதார சேவையைச் சேர்ந்த நாற்பது பேர் அடங்கிய குழுவினரே இலங்கை வந்துள்ளனர்.

இலங்கை (18ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் 'பிரின்சஸ் கிரிஸ்ரினா' கடற்படையினரின் பயன்பாட்டில்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்டு மலேசியாவில் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பிரிசன்சஸ் கிரிஸ்னா என்ற கப்பல் தற்போது தென்பகுதியில் கடல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

புலிகளின் இந்தக் கப்பல் சில மாதங்களுக்கு முன்னர் மலேசியாவில் கைப்பற்றப்பட்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

இலங்கையின் தென் பிராந்தியக் கடற்படை தலைமையகத்தினால் திருத்தியமைக்கப்பட்டுள்ள இந்தக் கப்பல் தற்போது காலி துறைமுகத்தில் தரித்துள்ளது.

இது தென்பகுதி கடலில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத் (18ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் தீர்ப்புக்கு எதிராக நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான முதலாவது இராணுவ நீதிமன்ற தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பியினர் நேற்று நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர். இதனால் நாடாளுமன்ற அமர்வுகள் சுமார் 5 நிமிடத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவ சேவையில் ஈடுபட்டிருந்தபோது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச் சாட்டுக்களை விசாரிப்பதற்காக முதலாவது இராணுவ நீதிமன்றம் நிறுவப்பட்டது.

குறித்த நீதிமன்ற விசாரணைகளின் போது ஜெனரல் சரத் பொன்சேகா குற்றவாளியாக காணப்பட்டதை அடுத்து அவரது பதவி நிலையை குறைப்பதான தீர்ப்பு வழங்கப்பட்டது. இராணுவ (18ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் கந்தனின் தேர் உற்சவத்தன்று 600 பொலிஸார் கடமையிலிருப்பர்!

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தேர்திருவிழா தினத்தன்று ஆலயச் சூழலில் 600 பொலிஸார் கடமையில் ஈடுபடுவர் என யாழ்ப்பாண பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவா தெரிவித்தார்.

நல்லூர் கந்தன் ஆலய தேர்த்திருவிழா உற்சவதினத்தன்று வருடம் தோறும் பெரு மளவான பக்தர்கள் கலந்து கொள்வர்.

இம் முறை தென்பகுதி மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் பெருமளவானோர் கலந்து கொள்ளவுள்ளனர். (18ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஆதரவாளர் தொடர்பில் விசாரிக்க இன்ரப்போலின் உதவி


## புலனாய்வுத் துறையினர் நீதிமன்றுக்கு தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தமது அமைப்பின் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உதவியதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இரண்டு சந்தேக நபர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள சர்வதேச பொலிஸாரின் உதவிகளை பெறுக்கொள்ள உள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

அத்துடன் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். (18ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய மஞ்சத் திருவிழாவான நேற்று அம்மன் மின் ஒளியில் அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் பிள்ளையார் மற்றும் முருகன் சகிதம் பவனி வருவதை படங்களில் காணலாம்

# ரணிலுடன் சஜித்,ரவி கலந்துரையாடல்

ஐக்கியதேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் அக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுடன் நேற்று மாலை கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர். கட்சியின் தலைமைப்பதவி உட்பட்ட பல விடயங்கள் கலந்துரையாடப் பட்டதாக ஐ.தே.க வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கியதேசியக் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்களை தம்பக்கம் வளைத்துப்போடும் முயற்சியில் அரசு ஈடுபட்டுவரும் நிலையில் தமது எம்.பிக்களுடன் கலந்துரையாடவும் இதில் பேசப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இக் கலந்துரையாடல் இன்றும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது (ச-5)

# இடமாற்றத்தில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் தற்போது நடை முறைப் படுத்தப்பட்டுவரும் ஆசிரிய இடமாற்றத்தின் போது ஏற்பட்ட பாதிப்புத் தொடர்பாக ஆராயும் கூட்டம் நாளைமறுதினம் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரிய குளம் சந்தியிலுள்ள புதிய உயர்கலைக் கல்லூரியில் நடைபெறும்.

இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் யோசப் ஸ்ராலின் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் சங்க யாழ் மாவட்ட கிளை அறிவித்துள்ளது. (ச-3)

# இலங்கை - இந்திய மீனவர்களுக்கிடையே பேச்சுவார்த்தை நேற்று ஆரம்பம்

இந்திய - இலங்கைமீனவர்களுக்கு இடையே மீன்பிடித் தொழிலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்க்கும் நோக்குடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தை ராமேஸ்வரத்தில் தொடங்கியது. இதில் கலந்துகொள்ள 23 பேர் கொண்ட இலங்கை மீனவர்கள் குழு இந்தியா சென்றுள்ளது.

ராமேஸ்வரம் ஜெகதாம்பட்டினம், நாகப் பட்டினம் உள்ளிட்ட பகுதிகளுக்கு சென்று அங்குள்ள மீனவர்களை சந்தித்து இவர்கள் பிரச்சினைகளைக் கேட்டறிவார்கள்.

இக் கூட்டத்தின் முடிபுகள் இரு அரசுகளிடமும் அளிக்கப்படும் என்றும் அதன் பிறகு அவர்கள், மேல் நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்றும் இலங்கை மீனவர்சங்கத் தலைவர்களில் ஒருவரும் இலங்கை மீன்வள அமைச்சின் சார்பில் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்பவருமான அந்தோனிப்பிள்ளை தெரிவித்தார்.

கடந்த இரு தசாப்தங்களுக்கும் கூடுதலான காலத்தில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டதாக தமிழக மீனவர்கள் கூறுகின்றனர்.

அதேநேரம் இலங்கையில் உள்நாட்டுப் போரால் மீன் தொழில் பாதிக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அதிக தூரம் வரை சென்று மீன் பிடித்து வந்தனர்.

தற்போது இலங்கையில் மீன்பிடித் தொழில் மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ள நிலையில் தமது கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகளை வைத்து அதிக அளவில் மீன் பிடிக்கக் கூடாது என்று இலங்கை மீனவர்கள் விரும்புகின்றனர்.

இழுவைப் படகுகள் இந்தியா முழுவதும் பயன்படுத்தப்படுவதாக தெரிவித்த இக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்த தென்னிந்திய மீனவர் சங்கங்களுடைய கூட்டமைப்பின் செயலர் விவேகானந்தன் இழுவைப்படகு பயன்பாடு முக்கிய விவாதப் பொருளாக இருக்கும் என கூறினார். (ச-5)

# பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் சம்மேளனம் (FUTA) அதன் சம்பளப் பிரச்சினை தொடர்பன தொழிற்சங்க நடவடிக்கையினை ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதிவரை ஒத்திவைத்துள்ளது.

ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க திறைசேரியின் செயலாளர் கலாநிதி பி.பீ.ஜயசுந்தர ஆகியோர் ஒகஸ்ட் 25 ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பேராசிரியர்களுக்கான கணிசமான சம்பள உயர்வுடன் கூடிய சம்பளத்திட்டத்தை முன் வைப்பதாக உறுதியளித்துள்ளமையால் தமது போராட்டத்தை ஒத்திவைத்துள்ளதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் சம்மேளனம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் தொழிற்சங்கத்தின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தமது சம்மேளனம் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர், திறைசேரியின் செயலாளர் ஆகியோருடன் ஜனாதிபதி மாளிகையில் பேசியதாக தெரிவித்தார்.

அதிகரிக்கப்பட்ட புதிய சம்பளம் நவம்பர் 2011 வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து வழங்கப்படும் என அவர் கூறினார்.

ஒகஸ்ட் 25 இல் அதிகரித்த சம்பளம் வழங்கத் தவறின் எமது தொழிற்சங்க நடவடிக்கை உத்வேகத்துடன் முன்னெடுக்கப் படும் என்று பேராசிரியர் அமரதுங்க வலியுறுத்திக் கூறினார். (ச-5)


யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

100% நல்ல சம்பளம்

➤ இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் கற்கலாம்.
➤ உங்களுக்கான விசா உத்தரவாதத்திணை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

கல்வித்தகமை: G.C.E. (O/L) போதுமானது
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் எம்மை தொடர்பு கொள்ளவும்

IELTS (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
(We guarantee minimum band 6,0 Upwards)

SPOKEN ENGLISH (For School Leavers & Workers)
இன்றைய நவீன உலகத்தில் ஆங்கில அறிவின் தேவைக்கேற்றபடி இப்பாடத்திட்டமானது நடாத்தப்படுகிறது.
வகுப்புகள் சனி, ஞாயிறு, வார நாட்களிலும், தொழில் புரிபவர்களுக்காக மாலை நேரங்களிலும் உண்டு

Diploma in English | Advanced Diploma in English
100 % பயிற்சி
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது
100 % வெற்றி

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.
பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0714299935/0773501499

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி 15.08.2010, 18.08.2010, 22.08.2010
காலை : 10.00 மணி
மாலை : 04.00 மணி



13.08.2010 முதல்
கருணாஸ் மற்றும் பலர் நடிப்பில்




செல்லா சினிமா(நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00
(C-5848)



வேலைவாய்ப்பும் நேர்முகத்தேர்வும்

கிளை முகாமையாளர் (BRANCH MANAGER) சந்தைப்படுத்தல்அதிகாரி (MAKETING EXECUTIVE) ஆலோசகர்கள் (COUNSELORS) ஆகிய பணியாளர்களுக்கு 21.08.2010 சனி காலை 8.30 இற்கு இல 644, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நேர்முகத் தேர்வு (ஆட் தெரிவு) இடம்பெறும். குறித்த பணியில் இணைய விரும்புவோர் தகுந்த சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.
(2175)





முத்துமாரி அம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகைதந்துள்ள பிரபல கைரேகை ஜோதி வல்லுனர்.

ஸ்ரீராம சாஸ்திரி
0775183681, 0775183109

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கைரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப் பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத் திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் செய்துதரப்படும்.

இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்துப் பயன் பெறுங்கள்

K.R.V.INN,
252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோவில் முன்பாக)

கைரேகை பார்க்கும் நேரம்: காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்
(C-882)

# இன்று ஒரு தகவல்

## பேச்சு

"அந்த ஆளுக்குப் பேசத் தெரியாது. அவரிடம் கொஞ்சம் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள்" என்று சொல்வதுண்டு.

அப்படியானால் என்ன அர்த்தம்?

"அவர் இன்னமும் குழந்தையாகவே இருக்கிறார். இன்னும் பேச்சுவரவில்லை என்றா அர்த்தம்? அப்படியில்லை."

"அவருக்கு நாகரிகமாக பேசத் தெரியவில்லை" என்று அர்த்தம்.

பேசுவதென்பது மனிதனால் மட்டும் முடியக் கூடிய ஒரு காரியம். அப்படியிருந்தும் அதனுடைய பெருமையை அவன் இன்னும் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

அதனால் தான் அவன், அளவுக்கதிகமாக வார்த்தைகளைக் கொட்டி விடுகிறான். அதன் பின் அவற்றையெல்லாம் திருப்பி அள்ளமுடியாமல் கிடந்து கஷ்டப்படுகிறான். கொட்டிய வார்த்தையை அள்ள முடியுமா?

ஒருத்தரை இன்றைக்குப் பார்த்து 'முட்டாள்' என்று திட்டி விடுகிறீர்கள். நாளைக்கு மறுபடியும் அவரிடம் போய் நேற்று உன்னை 'முட்டாள்' சொல்லி விட்டேன். அந்த வார்த்தையை திருப் பிக் கொடு வாங்கிக் கொண்டு போய்விடுகிறேன் என்றா சொல்ல முடியும்? அவன் கோபக்காரனாக இருந்தால் நேற்றைக்கே அதை வேறு விதமாக திருப்பிக் கொடுத்திருப்பான்.

உலகத்தில் எவ்வளவு ஜீவராசிகள் இருக்கிறது. அதற்கெல்லாம் வாய் இருக்கிறது. அந்த வாயெல்லாம் எதற்கு உபயோகம்? சாப்பிடுவதற்காக. ஆனால் நமக்கு இருக்கும் வாய் சாப்பிடுவதற்காக மட்டுமல்ல. பேசுவதற்காகவும் தான்.

பேசமுடியவில்லையானால் வாய் இருந்தால் கூட அது வாயில்லா ஜீவன் தான். ஒரு பையனைப் பார்த்து "அது வாயுள்ள பிள்ளை. பிழைத்துக் கொள்ளும்" என்றால், மற்ற பையன்களுக்கெல்லாம் முகத்தில் வாயே இல்லை என்றா அர்த்தம்? அப்படியில்லை.

அந்தப்பையன், கொஞ்சம் கெட்டிக்காரத்தனமாக பேசுவான்" என்று அர்த்தம். என்ன? இன்றைக்குத் தகவல் வெறும் உபதேசமாகவே போய்க் கொண்டிருப்பது மாதிரி தெரிகிறது. சரி, விடயத்துக்கு வருவோம்.

எப்படி பேச வேண்டும்? இதுதான் இன்றைக்கு நாம் தெரிந்து கொள்ள வேண்டியது.

இதற்கு எட்டுவிதமான குறிப்புகளை நமது பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அதெல்லாம் என்னென்ன? வரிசையாக சொல்கிறேன் கேளுங்கள்.

- உண்மையே பேசுக!
- நன்மையே பேசுக!
- அன்பாகப் பேசுக!
- நிதானமாகப் பேசுக!
- இனிமையாகப் பேசுக!
- ஆழமுடையதாக சிந்தித்துப் பேசுக!
- சமயமறிந்து பேசுக!
- சபையறிந்து பேசுக!

இந்த எட்டு அம்சமும் சரியாக பொருந்தி இருந்தால் தான் அது பேச்சு. பேசுவதெல்லாம் பேச்சாகிவிடாது. பேச்சு ஒரு சிறந்த கலை. எல்லாவற்றையும் விட பேசாமல் இருந்தும் பழக வேண்டும். அது ரொம்ப முக்கியம். உண்மையை பேச வேண்டும்.

சத்தியத்துக்கு மதிப்பு கொடுத்தவர்களைத்தான் சரித்திரம் மதிக்கும். உண்மை பேசினால் மட்டும் போதாது. அந்த உண்மையில் நன்மை கலந்திருக்க வேண்டும்.

ஒரு கொலைகாரனுக்குப் பயந்து கொண்டு ஒருத்தன் உங்கள் வீட்டுக்குள்ளேயே ஒளிந்திருக்கிறான். அந்த முரட்டு ஆசாமி, கையில் அரிவாளோடு வந்து "அவன் இங்கே வந்தானா?" என்று உங்களிடம் விசாரிக்கிறான்.

"உண்மைதான் உயர்வு தரும்" என்று நினைத்துக் கொண்டு 'ஆமாம் உள்ளே தான் இருக்கிறான். அடுப்பங்கரைப் பக்கம் உட்கார்ந்திருக்கிறான். போய்ப் பிடித்து விடுங்கள்' என்றா சொல்வீர்கள்.

அது நன்மையில்லாத உண்மை. அதனால் பிரயோசனமில்லை. அதேமாதிரி உங்களுடைய பேச்சில் அன்பு இருக்க வேண்டும். நிதானம் இருக்க வேண்டும். இனிமை இருக்க வேண்டும். சிந்தித்துப் பேச வேண்டும்.

சமயமறிந்து பேசுவது முக்கியம். அதைப்பற்றி நமக்கு வேறு யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. எந்த நேரத்தில் யாரிடம் என்ன பேசினால் காரியம் நடக்கும் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். அது கை வந்தகலை.

அவையறிந்து பேசும் திறமை, பேச்சாளர்களுக்கு ரொம்ப முக்கியம். அது இல்லையெனில் நிலைமை பரிதாபமாக மாறிவிடும்.

ஒரு பேச்சாளர் மும்முரமாக நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார். சபையிலிருந்தவர்களெல்லாம் ஒவ்வொருவராக கழர ஆரம்பித்தனர். கடைசியில் இருவர் மட்டும் இருந்து அக்கறையாக கவனித்துக் கொண்டிருந்தனர்.

மேடையில் பேசிக் கொண்டிருந்தவர் அவர்களைப் பார்த்துச் சொன்னார்.:

"எனக்கு கூட்டம் முக்கியமில்லை. எவ்வளவு பேர் என்பேச்சைக் கேட்கிறார்கள் என்பதும் முக்கியமில்லை. நீங்களிருவரும் ஊக்கமாக கவனித்துக் கொண்டிருக்கிறீர்கள் அது போதும்" என்றார்.

இதைக் கேட்டதும் ஒருவர் எழுந்து, "அப்படியில்லை. நீங்கள் பேசி முடிந்தவுடன் தொடர்ந்து பேசுவதற்காக காத்துக் கொண்டிருக்கிறோம். சீக்கிரம் முடியுங்கள்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## லெபனானில் சட்டவிரோதமாக தங்கியுள்ள பணியாளர்களில் 700 பேர் நாடு திரும்புவதற்கு பதிவு

(கொழும்பு)

லெபனானில் சட்டவிரோதமாக தங்கியுள்ள 700 இற்கும் மேற்பட்ட இலங்கைப் பணியாளர்கள் நாடு திரும்புவதற்காக அந்த நாட்டிலுள்ள தூதரகத்தில் பதிவினை மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு தங்கியுள்ள இலங்கையர்களுக்காக அறிவிக்கப்பட்டிருந்த பொது மன்னிப்புக் காலத்தை பயன்படுத்தி அவர்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கு முன் வந்துள்ளதாக லெபனானுக்கான இலங்கைத்தூதுவர் எம்.மொகமட் தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக இவர்களில் 100 பேர் இந்த வார இறுதிக்குள் நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

லெபனானில் சுமார் 10 -15 வருடங்களாக இலங்கைப் பணியாளர்கள் சட்டவிரோதமாக தங்கியுள்ளனர் என இலங்கைத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு திரும்புவதற்கு போதிய வசதி இல்லாத காரணத்தினால் பொதுமன்னிப்புக் காலம் வழங்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (5-4)

## செயலமர்வு

யாழ். ஆசிரிய வள நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற English as a life skill என்ற பத்து நாள் செயலமர்வில் பங்குபற்றிய சகல ஆசிரியர்களுக்குமான இருநாள் செயலமர்வு எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் யாழ். வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற வுள் ளது.

எனவே மேற்குறித்த ஆரம்ப செயலமர்வில் பங்குகொண்ட அனைத்து ஆசிரியர்களும் இச் செயலமர்வில் பங்கு கொள்ள வேண்டும் என யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் ரி.இராசலிங்கம் அறிவித்துள்ளார். (4)

## விபத்துக்களினால் வருடாந்தம் 2 ஆயிரம் பேர் உயிரிழப்பு

### போக்குவரத்து ஆணையாளர் கவலை

(கொழும்பு)

நாட்டில் வருடாந்தம் வாகன விபத்துக்களின் மூலம் 2 ஆயிரம் பேர் மரணமாவதாக போக் குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களத்தின்ஆணையாளர் டி.ஏ. தர்மசிறி இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

வருடாந்தம் வாகன விபத்துக்களின் மூலம் 6 ஆயிரம் பேர் வரை காயமடைவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு நோய் காரணமாக இவ் வருடத்தில் மாத்திரம் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பில் மக்கள் மத்தியில் அச்சநிலை தோன்றியுள்ளது.

எனினும் இதனை விட அதிகளவான மக்கள் விபத்துக்களில் மரணமாவது குறித்து பொதுமக்கள் கவனத்தில் கொள்வதில்லை என்றும் ஆணையாளர் கவலை வெளியிட்டுள்ளார். (5-4)

## இராசி பலன்

*18-08-2010*
*(ஆவணி 2, புதன்கிழமை)*
*நவமி பிற்பகல் 4.41 மணிவரை*
*விசாகம் பிற்பகல் 12.25 மணிவரை*
*இராகுகாலம் 12.05-1.35 மணிவரை*
*சுபநேரம் 4.35-6.05 மணிவரை*
*அமிர்த சித்தம்*

**மேடம்** கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, மற்றவர்களுக்காக பொறுப்பு சொல்வதை தவிர்ப்பது நல்லது, பண விரயம் கூடும், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**இடபம்** பெண்களால் பெருமை வந்து சேரும் நாள், உங்களை நம்பியவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பிரிந்தவர் இணைந்து கொள்வர், மனைவி வழியே வரவு வந்து சேரும் நாள்.

**மிதுனம்** உற்சாகமாகப் பணிபுரியும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுப்பீர்கள் , வருமானம் வருவதற்கான சூழ்நிலை உருவாகும், விருந்துபசாரம்.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், தேவைக் கேற்ப பணவரவு கிடைக்கும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தடைப்பட்ட காரியம் கைகூடும்.

**சிங்கம்** இல்லம் தேடி இனிய செய்தி வந்து சேரும் நாள், தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**கன்னி** மறக்க முடியாத சில சம்பவங்கள் நடைபெறும் நாள், நீண்ட நாளைய பிரச்சினையொன்றை இன்று நல்ல முடிவுக்கு வரலாம், உறவினர் வழியில் சில உதவிகள் கிடைக்கலாம்.

**துலாம்** வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரும் நாள், பொதுவாழ்வில் புகழ் கூடும், வீடு கட்டும் முயற்சிக்கு வித்திடுவீர்கள், தொலைபேசி மூலம் தொழில் சம்பந்தமான செய்தி வந்து சேரலாம்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், இல்லத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறலாம், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்

**தனுசு** உற்றார் உறவினர்களுக்காக ஒருசில தொகையை கொடுத்து உதவ வேண்டி வரலாம், இடமாற்றத்தால் இன்பம் காண வேண்டிய நாள்.


**மகரம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வருங்கால நலன் கருதி வாங்கிய தொகையை அதிகரிக்க முற்படுவீர்கள், வியங்கும் செய்தி ஒன்று வீடு வந்து சேரும்.

**கும்பம்** அருமையான நாள், அன்பு நண்பர்கள் ஆதரவு வழங்குவர், பண வரவு எதிர் பார்த்தபடியே வந்து சேரலாம், தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** மனக் குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும்நாள், உடல் நலம் சீராகி உற்சாகப்படுவீர்கள், சொத்து தகராறுகள் நல்ல முடிவுக்கு வரலாம்.

வளவன்

## பேசும் படம்



நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் தூக்கம்...

படம் - தமிழ்மிரர்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 60-80 | 70 | 50 |
| பச்சைமிளகாய் | 80 | 120 | 75 |
| தக்காளி | 80 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 60 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 120 | 100 |
| பூசணி | 50 | 50 | 40 |
| புடோல் | 40 | 60 | 30 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 70 | 120 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 30 |
| கருணைக் கிழங்கு | 70 | 70 | 60 |
| பயற்றங்காய் | 80 | 100 | 40 |
| லீக்ஸ் | 120 | 140 | 110 |
| பீற்றூட் | 40 | 70 | 45 |
| கறிமிளகாய் | 60 | 100 | 70 |
| முருங்கைக்காய் | 80 | 140 | 80 |
| போஞ்சி | 120 | 140 | 75 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 25 | 25 | 30 |
| தேசிக்காய் | 80 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 30 |

# மரண அறிவித்தல்



## திரு.ச.வி.முருகேசு

காரைநகரைப் பிறப்பிட மாகவும் பம்பலப்பிட்டி இல. 17/1 பொன்சேகா மாவத்தையை வசிப்பிட மாகவும் கொண்ட ச.வி.முருகேசு (பழம் பெரும் தொழிலதிபர்) 16.08.2010 அன்று சிவ பதம் அடைந்துவிட்டார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 19.08.2010 வியாழக் கிழமை காலை 9.00 மணிதொடக்கம் 10.00 மணிவரை 17/1, De. Fonseka Road, Colombo - 4. இல் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இன்று புதன் கிழமை 18.08.2010, இல. 48, ஆஸ்பத்திரி வீதியில் (கொட்டடி) காலை 9 மணிமுதல் பிற்பகல் 4.00மணிவரை அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்பவர்களுக்கு பேருந்து (பஸ்) வசதிகள் இலவசமாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. அதில் கலந்துகொள்பவர்கள் புதன்கிழமை மாலை 7.00 மணிக்கு 154, ஆஸ்பத் திரி வீதியில் கடைக்கு முன்பாக வந்து ஒன்றுகூடும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
உரிமையாளரும் ஊழியர்களும்
021 222 2202
021 222 8899

(சி-885)

# த.தே.கூட்டமைப்பு எம்.பி.க்கள் மூவரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர்களான பொன்.செல்வராசா, பா. அரியநேத்திரன், எஸ். யோகேஸ்வரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரை ரட்ணம் மற்றும் கிழக்கு மாகாண வேலை யற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் கே. ஜெயராஜா ஆகியோரை எதிர்வரும் 7ஆம் திகதி நீதி மன்றில் ஆஜராகுமாறு மட்டக் களப்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மட்டக்களப்பில் கடந்த புதன்கிழமை கிழக்கு மாகாண வேலையற்றபட்டதாரிகள் சங்கத் தினால் ஏற்பாடு செய்யப்பட் ஆர்ப் பாட் ஊர்வலம் தொடர்பாக பொலிஸார் நீதி மன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையின் பிரகாரம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ள்ளது.

இலங்கை அரசுக்கு எதிராக வேலை வாய்ப்பு வழங்கக்கோரி பதாதைகளை ஏந்தி யவாறு பொலிஸ் அனுமதி பெறாமல் வீதியில் ஊர்வலம் சென்றதாகவும் ஊர்வலத்தைக் கலைப்பதற்கு நீதிமன்ற உத் தர வைப் பெற நேரம் போத வில்லை என்றும் காத்தான்குடி பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்டப் பட்டுள்ளது.

ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களை கைது செய்தால் மக்கள் மத்தியில் பிரச் சினைஏற்படும்என்றகாரணத்தினால் அவர்களை கைது செய்யவில்லை என்று அந்த அறிக் கையில் பொலிஸார் தெரிவித்து ள்ளனர்.

குறித்த ஆர்ப்பாட்ட ஊர்வலமானது மா வட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பா. அரிய நேத்திரன், பொன்செல்வராசா, எஸ்.யோகேஸ்வரன், மாகாண சபை உறுப்பி னர் இரா. துரைரட்ணம், வேலையற்ற பட்டதா ரிகள் சங்க தலைவர் ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிந்துள்ளதா கவும் இது தொடர்பாக விளக்கமளிக்க மேற் குறிப்பிட்டவர்கள் எதிர்வரும் 7ஆம்திகதி நீதி மன்றில் ஆஜராகுமாறு கட்டளை பிறப்பிக்கு மாறும் பொலிஸார் அந்த அறிக்கையில் நீதி மன்றத்தை கோரியிருந்தனர்.

அதனை ஏற்றுக்கொண்ட மட்டக்களப்பு நீதவான் வி.இராமகமலன் இந்த அழைப் பாணையைப் பிறப்பித்துள்ளார். (5-4)

## பூங்காவனத் திருவிழா

(உடுப்பிட்டி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் பத்தாவது விசேட திருவிழா வான பூங்காவனத்திருவிழா இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள் ளது.

அன்றையதினம்விசேடபூசைகளும்நாதஸ்வர தவில் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. (4)

# புனித கப்பல் ஏந்தி மாதா வருடாந்த திருத்தல திருவிழா

(பொற்பதி)

கட்டைக்காடு புனித கப்பல் ஏந்தி மாதா திருத்தலத்தின் வருடாந்த திருவிழா கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது.

கடந்த கால யுத்தத்தின் பின் முதல் தடவையாக இவ்வருடம் திருவிழா கொண் டாடப்படுகிறது.

இத்திருவிழாவில் அரச அமைப்பு பிரதி நிதிகள், அப்பகுதி உயர் இராணுவ அதிகாரி கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

2006ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்குப் பின் இப் பகுதி வாழ் மக்கள் அங்கு சென்ற போது வீடு இருந்தும் கோயிலை மட்டும் தரிசித்துவந்தமை குறிப்பிடத்தக்க விடய மாகும். (2)

## மீன்பிடி வலைகள் கையளிக்கப்படவுள்ளன

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்திற்கு உட் பட்ட மாமுலை ,கட்டைக்காடு மற்றும் உடுத் துறை ஆகிய கடற்றொழிலாளர்களின் சங்கங் களின் அங்கத்தவர்களில் ,342 பேருக்கு 85 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன் பிடி வலை கள் இன்னும் சில தினங்களில் போரூட் நிறுவனத்தினால் வழங்கப்படவுள்ளதாக சமா சத்தின் பொது முகாமையாளர் த.பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த உதவி குறிப்பிட்ட சில அங்கத்தவர் களுக்கு மட்டும் கிடைத்துள்ளது. ஏனையவர் களுக்கான இந்த உதவிகளை அரச, அரச சார்பற்ற பொதுத்தொண்டு நிறுவனங்கள் வழங்க முன் வரவேண்டும் என்று ,பொது முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள் ளார். (2)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் 1,2,3 மற்றும் 4ஆம் வருடங்களுக்குரிய வணிக மாணி / தொழில் நிர்வாக மாணி பழைய பாடத்திட்ட முதலாம் அரை ஆண்டு பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எனவே மேற்படி பரீட்சைக்குத் தோற்ற விருக்கும் மாணவர்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வணிக பீடாதிபதி அலுவலகத்திற்கு சமுகமளிக்கு மாறு முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி கே.தேவராஜா கேட்டுள்ளார். (4)


SUZUKI மற்றும் SUZUKI MARUTI நவீனமயப்படுத்தல் முகாம் யாழ்பாணத்திற்கு வருகிறது.

யாழ் மக்கள் மீதான அபிமானத்தால் AMW உங்கள் வாகனங்களை நவீனமயப்படுத்துவதற்கான புதிய நோக்குடன் உங்களை தேடி வருகிறது.



ஆகஸ்ட் 21 மற்றும் 22
9.00 a.m. மணி முதல் 5.00 p.m. மணி வரை
றோயல் லுப்ரிகேஷன் சேவை நிலையம்
K.K.S. வீதி சுன்னாகம், யாழ்ப்பாணம்
இலவச பரிசோதனை
பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்
முரளி 0212 241090, 0213 217771, 0776 013568

- செய்கூலியில் 50% மட்டுமே அறவிடப்படும்.
- சுசூக்கி மற்றும் சுசூக்கி மாருதி வாகனங்களுக்கான இலவச பரிசோதனை அறிக்கைகள்.
- உங்கள் வாகனங்களுக்கான இலவச மதிப்பீடு.
- இன்னும் பல


*நிபந்தனைகளுக்கு உட்படும்

AMW வின் தகுதியுள்ள சிறந்த தொழினுட்பவியலாளர்களைக் கொண்டு நடாத்தப்படுகிறது.

வாகன உதிரிப்பாகங்களுக்கு விசேட விலைக்கழிவு

SUZUKI Way of Life! SUZUKI MARUTI Count on us

AMW அசோசியேட்டட் மோட்டர் வேஸ் (பிரைவட்) லிமிட்டட்
துரித அழைப்பு 011 2 690099





வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினால் கோப்பாய் பிரதேச புற்றுநோயாளர்களுக்கு அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு அண்மையில் கோப்பாய் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
இந்நிகழ்வில் பாரம்பரிய சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ்தேவானந்தா பயனாளி ஒருவருக்கு அன்பளிப்பு வழங்குவதையும் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உரையாற்றுவதையும் அருகில் சம்மேளன உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## முன்பள்ளி விளையாட்டு விழா

(நல்லூர்)

ஆவரங்கால் சர்வோதய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சர்வோதய சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் மேற்படி நிலையத்தின் தலைவர் அ.சிங்கராசா தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.விமலநாதன் கலந்து சிறப்பிப்பதுடன்,சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரிய ஒன்றியத் தலைவர் எஸ்.ஜே.செல்வராசா,இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி.கிழக்கு பிரிவின் தலைவர் இ.மயில்வாகனம்,வலி.கிழக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.கிழக்கு அமைப்பாளர் எம். தர்மராசா,சமூக அபிவிருத்தி மன்றத்தின் உப தலைவர் திருமதி நவநீதன் ஜெகதீசன் ,யாழ். மாவட்ட சர்வோதய இணைப்பாளர் திருமதி ரேணுகா சுரேந்திரகுமார் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(2-134)

* * *

(அச்சுவேலி)

ஆவரங்கால் மேற்கு சர்வோதய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் அ.சிங்கராஜா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் கே. விமலநாதன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

(4)

## நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் முருகன் உற்சவகாலத்தை ஒட்டி நல்லூர் இளங்கலைஞர் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் 4ஆம் நாளான இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிமுதல் 7.30.மணிவரை இன்று செல்வன் நாகேந்திரன் சுபாஸ்கரன் (பாட்டு), ஏ.ஜெயராமன் (வயலின்), சதாவேல்மாறன் (மிருதங்கம்), இரா.சிவராமன்(கெஞ்சிரா) ஆகியோர் வழங்கும் திருமுறைக்கச்சேரி இடம் பெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடைபெற்று வரும் சமய செற்பொழிவு மற்றும் கலை நிகழ்வில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை இந்து சமய ஒழுக்கம் என்னும் விடயம் பற்றி கனக வாரிதி கனகராசா சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து ஏழாலை ஆத்மஜோதி ஓட்டுமடம் ஞானவைரவர், இள வாலை ஞான வைரவர் ஆகிய அற நெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (4)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழக தமிழ்த் துறையினால் நடத்தப்பட்டு வரும் கருத்தரங்கு தொடரின் மூன்றாவது தலைப்பாகிய ***சங்க இலக்கிய புலவர்களின் பால்நிலையும் பாடல்களும்*** என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கு இன்று புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு யாழ். பல் கலைக்கழக விரிவுரை மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத்தலைவர் பே ராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கருத்துரையை கலாநிதி திருமதி அம்மன்கிளி முருகதாஸ் வழங்கவுள்ளார். (2)

## ஆன்மீக நிகழ்வுகள்

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நதி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு சந்நியான்ஆச்சிரமத்தில் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ***குன்றுதோறாடும் குமரன்*** என்னும் விடயம் பற்றிவல்லைசிவ குரு வித்தியாசாலை அதிபர் ஆ.சிவாநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

* * *

வியாபாரி மூலை இன்பர் சிட்டி ஶ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவ காலத்தையொட்டி நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று புதன்கிழமை மாலை 7 மணிக்கு ***கற்பூர விநாயகரின் கருணை மிகு அருளாட்சி*** என்னும் விடயம் பற்றி அல்வாய் அம்பாள் வித்தியாலய ஆசிரியர் சிவ ஶ்ரீ அழகு ஜெகதீஸ்வரதேசிகர் சொற்பொழிவாற்றவுள்ளார். (4-35)

## அனுமதிப்பத்திரமின்றி ஏற்றி வந்த மரக்குற்றிகள் பொலிஸாரினால் பறிமுதல்

(அச்சுவேலி)

வன்னியில் இருந்து அனுமதிப்பத்திரமின்றி முதிரை, பாலை போன்ற மரக்குற்றிகளை மாட்டெருவில் மறைத்து வைத்து ஏற்றி வந்த பார வூர்தி ஒன்றை நேற்று முன்தினம் திங்கட்கிழமை அச்சுவேலி தோப்புப் பகுதியில் வைத்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றிய பாரவூர்தியை பொலிஸ் நிலையம் கொண்டு சென்று சோதனையிட்ட போது மினிபஸுக்கு பொருத்தும் இயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக பார ஊர்தியின் சாரதியும் வாகனத்தில் பொருள் ஏற்றிய உரிமையாளரும் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (4)

## பன்றிகளின் தொல்லையால் விவசாய நடவடிக்கை பாதிப்பு

தெல்லிப்பளை கிழக்கு சித்தியம் புளியடி கட்டுவன் ஏழாலை மாகாதனை போன்ற இடங்களில் பயிரிடப்பட்டுள்ள வெங்காயம், கரட், பீற்றுட், மரவள்ளி போன்ற பயிர்களை இரவு வேளைகளில் தோட்டத்தில் நுழையும் பன்றிகள் சேதப்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்துவதற்காக விவசா யிகள் இரவு வேளையில் வெடி கொளுத்தி பன் றிகளை விரட்டி வருவதாகவும் அத்துடன் தடம் வைத்து பன்றிகளைப்பிடித்து வருவ தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பெரும் சிரமங்களின் மத்தியில் விவசாய நடவடிக்கையினை மேற்கொண்டுவருவதாகவும் இப் பகுதி வாழ் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (2)

## வரலக்ஷ்மி விரத பூசை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஶ்ரீ வள்ளிபுர ஆலயத்தில் வரலக்ஷ்மி விரதத்தை முன்னிட்டு ,நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரலக்ஷ்மிக்கு விசேட அபிஷேக ஆராதனையும் திரு விழா பூசையும் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம்2 மணிக்கு வரலக்ஷ்மி காப்பு வழங்கல் நிகழ்வும் குத்துவிளக்கு பூசையும் இடம்பெறவுள்ளது. (2)




## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் அமைந்த நாவாந்துறை, பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) கட்டம்கட்டமாக கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இச் சந் தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியினை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் யாழ்.மாநகர சபை சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக்கொள்கின்றார்.

| | | |
|---|---|---|
| 18.08.2010 | மு.ப 09.00-10.30 | பொம்மைவெளி மகப்பேற்று நிலையம் |
| | மு.ப 10.30 -12.00 | செழியன் வீதி அம்மன் கோயில் |
| | பி.ப 2.00 - 3.30 | ஆறுகால் மடம் வாசிகசாலை |
| 19.08.2010 | மு.ப 09.00-10.30 | மானிப்பாய் வீதி ஐந்து சந்தி |
| | மு.ப 10.30-12.00 | ஓட்டுமடம் மானிப்பாய் சந்தி |
| | பி.ப 2.00 - 3.30 | ஓஸ்மானியாக்கல்லூரி |
| 20.08.2010 | மு.ப 09.00-10.30 | சிவன் வடக்கு வீதி |
| | மு.ப 10.30-12.00 | சிவன்பண்ணை வீதி சீனிவாசகம் வீதி |
| | பி.ப 2.00 - 3.30 | கொட்டடி சனசமூக நிலையம் |
| 23.08.2010 | மு.ப 09.00-10.30 | கற்குளம் சனசமூக நிலையம் |
| | மு.ப 10.30-12.00 | வில்லூன்றிப் பிள்ளையார் கோயில் |
| | பி.ப 2.00 - 3.30 | கண்ணபுரம் சன சமூக நிலையம் |
| 27.08.2010 | மு.ப 09.00-10.30 | சோலபுரம் சனசமூக நிலையம் |
| | மு.ப 10.30-12.30 | கலைவாணி சனசமூக நிலையம் |
| | பி.ப 2.00 - 3.30 | சென் நிக்லஸ் சனசமூக நிலையம் |

## ஆசிய சிறுவர் சித்திர விழாவை முன்னிட்ட சித்திரப் போட்டிகள்

(அல்வாய்)

யப்பான் யுனெஸ்கோ சங்கத்துக்காக பெடறேசன் மற்றும் 16வது மிட்சுபிசி பொது விவகார குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஆசிய சிறுவர் சித்திர விழாவை முன்னிட்டு சித்திரப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டி தொடர்பாக சகல வலயங்களிலும் சித்திரம் தொடர்பாக ஆற்றல் உள்ள சிறார்களுக்கு அறிவுறுத்தி போட்டியில் அவர்களை பங்கேற்க செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் இப்போட்டி பற்றி உரிய விபரங்கள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இப்போட்டிக்கான சித்திரங்கள் ''இது எனது வாழ்வு'' என்பதை பிரதிபலிக்கும் வகையில் தமது நாளாந்த வாழ்வில் ஏதேனும் ஒரு விடயத்தை விவரிக்க கூடியவாறு அமைந்திருத்தல் வேண்டும் .

இப்போட்டிக்கு 6 முதல் 12 வயதுவரை உடையவர்கள் பங்குபற்ற முடியும் எனவும் சித்திரம் A4 தாளில் வரையப்படவேண்டும்.

போட்டியாளர்கள் தமது பெயர், பிறந்த திகதி,வயது,பால்,பாடசாலை முகவரி , சொந்த முகவரி,தாய் அல்லது தந்தையின் தொலைபேசி இலக்கம் என்பனவற்றை ஆக்கத்தின் பின்புறத்தில் குறிப்பிட்டு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் நாயகம் இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு சபை, 5ஆம் மாடி, கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்திர முல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கு மாறும் மேலதிக தகவல்களை 011 217708 என்ற தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் பிரதிப்பணிப்பாளர் நாயகம் ஏ.பிரசன்ன சந்தித் தெரிவித்துள்ளார்.

(4-19)

# போதைப்பொருள் விற்பனை செய்த இளைஞன் நீர்கொழும்பில் கைது

(கொழும்பு)

ஹெரோயின் போதைப்பொருள் பைக்கற்றுக்களை விற்பனை செய்து வந்த இளைஞன் ஒருவனை நீர்கொழும்பு பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

நீர்கொழும்பு சாந்த ஜோசப் வீதியில் , ஆர்பிக்கோ சுப்பர் மார்க்கெட் அருகில் உள்ள இடத்தில் வைத்து சந்தேகநபரான இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளான்.

சந்தேக நபர் போதைப்பொருள் பைக்கற்றுக்களை நீண்ட காலமாக விற்பனை செய்து வந்துள்ளார் எனவும் இவரிடம் போதைப் பொருள் பைக்கற்றுக்களை வாங்குபவர்கள் அதனை எடுத்துச்செல்ல முடியாது எனவும் இவரது இடத்தில் உள்ள அறை ஒன்றில் வைத்து அதனை பாவிக்க வேண்டும் எனவும் பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர் போதைப்பொருளுக்கு அடிமையாகாத ஒருவர் எனவும் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பெயரில் ஏற்கனவே சிறைத்தண்டனை அனுபவித்தவர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நீர்கொழும்புப் பொலிஸார் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-4-2)

# அரசியல் அமைப்பு திருத்தம் தொடர்பில் ஆராயும் குழு விரைவில் கூடவுள்ளது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள அரசியல் அமைப்பு திருத்தங்களில் முதல் கட்ட திருத்த யோசனைகளை அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற நிலையில் திருத்தங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேட குழு விரைவில் கூடவுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த விசேட குழுவின் அரசியல் அமைப்பு திருத்தங்கள் தொடர்பான அறிக்கை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப் பட்டதன் பின்னரே திருத்த யோசனைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது என்று அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டார்.

கடந்த வாரம் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கடந்த ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பினார்.

இந்நிலையில் அவர் தலைமையில் குறித்த குழு விரைவில் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் திருத்தங்களை மேற்கொண்டு அமைச்சரவைக்கு பொறுப்புக் கூறும் பிரதமர் முறைமையை உருவாக்குதல், 17ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவருதல், செனட் சபை அமைத்தல், உள்ளூராட்சிமன்ற தேர்தல் முறைமையில் மாற்றம், தேர்தல் முறைமை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் திருத்தங்களை கொண்டுவருவது தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்துவருகின்றது.

எனினும் முதல் கட்டமாக சில திருத்த யோசனைகளையே அரசாங்கம் முன் வைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறான திருத்தங்கள் என்பது தொடர்பில் தற்போது விரிவாக ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

முக்கியமாக உள்ளூராட்சி மன்ற தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பான யோசனை முதல் கட்ட திருத்தத்தில் நிச்சயமாக உள்ளடக்கப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

மேலும் அரசியல் அமைப்பு திருத்தங்கள் தொடர்பில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் பேச்சுக்களில் ஈடுபட்டுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (5-4-2)

# நாடு முழுவதிலும் 2 ஆயிரம் சட்டவிரோத நகைக்கடைகள்

## தங்க நகை அதிகார சபைத் தலைவர் தகவல்

நாடு முழுவதிலும் சுமார் 2ஆயிரத்திற்கும் அதிகமான சட்டவிரோத நகைக்கடைகள் செயற்பட்டு வருகின்றன.

இதனால் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க நகை அதிகார சபையின் தலைவர் அனில் கொஸ்வத்த தெரிவித்துள்ளார்.

குறித்த சட்டவிரோத நகைக்கடைகளில் இருந்து கொள்வனவு செய்யப்படும் நகைகள் தரம் வாய்ந்தவையாக காணப்படாத அதே வேளை அவர்களுடைய சேவை பொதுமக்களுக்கு நியாயமற்றதாகவும் காணப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

நியாயமற்ற சில விதிமுறைகளை விதிப்பதன் மூலம் அவர்கள் மக்கள் முன்னிலையில் உண்மையாக நடந்துகொள் வதில்லை. இதனால் இந்த நிலைமையினை தவிர்ப்பதற்காக தமது அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இரத்தினக்கல் மற்றும் தங்க நகை அதிகார சபை தலைவர் குறிப்பிட்டுள்ளார். (5-4-2)

# பொன்நகர் மக்கள் மீளக்குடியமர ஆளுநரினால் அனுமதி மறுப்பு

## சிறிதரன் எம்.பி.யிடம் மக்கள் குமுறல்


(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி பொன்நகர்ப் பகுதியில் மீளக்குடியமர வடமாகாண ஆளுநரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனிடம் முறையிட்டுள்ளனர்.

பொன் நகர்ப் பகுதியில் சுமார் 50 குடும்பங்களுக்கான வீடுகள் அமைக்கப்பட்டு அங்கு மக்கள் வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் இடம்பெயர்வுக்குப் பின் தாங்கள் அங்கு மீளக்குடியமரச் சென்ற போது, அப்பகுதி வடமாகாண சபை அலுவலகம் அமைக்கவென ஒதுக்கப்பட்டுள்ளதெனத் தெரிவித்து தங்களை மீளக்குடியமர அனுமதிக்கவில்லையென அவர்கள் சிறிதரன் எம்.பி.யிடம் தெரிவித்தனர். இதனை செவிமடுத்த சிறிதரன் எம்.பி. ஆளுநருடன் தொடர்பு கொண்டு பேசி உரிய தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். (ச)

# 18.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



## நிகழ்வுகள்

* 1201- லாத்வியாவின் ரீகா நகரம் அமைக்கப்பட்டது.
* 1868- பிரெஞ்சு வானியல் நிபுணர் பியேர் ஜான்சென் சூரிய கிரகணத்தை ஆராயும் போது ஹீலியம் என்ற கனிமத்தைக் கண்டுபிடித்தார்.
* 1877- செவ்வாய்க் கோளின் ஃபோபோஸ் கண்டு பிடிக்கப்பட்டது.
* 1891- மார்டீனிக் தீவில் நிகழ்ந்த பெரும் சூறாவளியினால் 700 பேர் கொல்லப்பட்டனர்.
* 1917- கிறீசில் தெசலோனிக்கி என்னும் நகரில் இடம்பெற்ற தீவிபத்தில் நகரின் பெரும் பகுதி அழிந்தது. 70ஆயிரம் பேர் வீடுகளை இழந்தனர்.
* 1924-பிரான்ஸ் ஜெர்மனியில் இருந்து தனது படைகளைத் திரும்ப அழைக்க ஆரம்பித்தது.
* 1938-நியூயோர்க்கையும் கனடாவின் ஒண்டாரியோவையும் இணைக்கும் ஆயிரம் தீவுகள் பாலத்தை அமெரிக்க அதிபர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட் திறந்து வைத்தார்.
* 1950- பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஜூலியன் லாஹாட் படுகொலை செய்யப்பட்டார்.
* 1958- விளாடிமீர் நபகோவ் எழுதிய லொலிட்டா (Lolita)என்ற புதினம் அமெரிக்காவில் வெளியிடப்பட்டது.
* 1971-வியட்நாம் போர்: அவுஸ்திரேலியா , நியூசிலாந்து ஆகியன தமது படைகளை திரும்ப அழைக்க முடிவு செய்தனர்.
* 1983- டெக்சாசைத் தாக்கிய அலீசியா என்ற சூறாவளியினால் 22 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

* 1750- அந்தோனியோ சாலியரி, இத்தாலிய இசையறிஞர் (இ.1825)

### இறப்புகள்

* 1227-செங்கிஸ்கான், மங்கோலியப் பேரரசின் மன்னன்.
* 1850- ஹோனர் தெ பல்ஸாக் , பிரெஞ்சு எழுத்தாளர் (பி.1799)
* 1945- நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்(பி.1897)
* 2009- கிம் டாய் ஜுங் தென்கொரியக் குடியரசுத் தலைவர் (பி.1924)

**1945-இந்திய விடுதலைப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தாய்வானில் விமான விபத்தில் கொல்லப் பட்டதாக நம்பப் படுகிறது.**



# ஆவணி மாத இராசி பலன்கள்

## சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம் வரை)

ஆழமாக சிந்தித்து அதிரடி முடிவெடுத்து செயற்படும் சிங்க ராசி நேயர்களே!

முயற்சிக்கு முக்கியத்துவம் அளிப்பவர்கள் நீங்கள். முன்னேற்றத்தையே எந்நேரமும் சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள். விரும்பியது கிடைக்காவிட்டால் கிடைத்ததை விரும்பு என்பது பழமொழி. ஆனால் உங்களை பொறுத்தவரை விரும்பியது கிடைக்கும் வரை விடாமுயற்சி செய்வீர்கள். வெளிப்படையான பேச்சும் வெகுளித்தனமும் உங்களுக்கே உரியதாகும்.

ஆவணி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசிநாதன் சூரியன் சொந்த வீட்டில் சஞ்சரித்து தனாதிபதியுடன் கூடி மாதம் தொடங்குவதால் பணப் புழக்கம் அதிகரிக்கும். பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக்கொள்வீர்கள். சேமிப்பு உயரும் என்றாலும் திடீரென ஏழரைச் சனியின் ஆதிக்கத்தால் செலவு நடைகளும் அதிகரிக்கும் சிக்கல்களும் உருவாகும்.

இறை வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் இன்னல்களிலிருந்து விடுபட இயலும். குருவின் வக்ர இயக்கம் ஒரு வழிக்கு நன்மைதான் என்றாலும் பஞ்சாமதிபதியாகவும் குரு விளங்குவதால் பிள்ளைகள் வழியில் பெரும் செலவுகள் உருவாக லாம்.

வாக்கு ஸ்தானத்தில் செவ்வாய், சனி இருப்பதால் எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து சொல்வது நல்லது. விவாதங்களைத் தவிர்ப்பது புத்திசாலித்தனமாகும்.

ஆகஸ்ட் 22ஆம் திகதி 2,11க்கு அதிபதியான புதன் கடக ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இலாபாதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது இலாபத்திற்கேற்ற விரயம் வந்து கொண்டேயிருக்கும். எதை நினைத்தீர்களோ அதை வாங்க உடனே பணம் கைக்கு வந்து சேரும். தர்ம சிந்தனை மேலோங்கும். குடும்பத்தில் சொத்து பிரச்சினைகள் சுமூகமாக முடியும். உடன்பிறப்புகள் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வர்.

ஆகஸ்ட் 31ஆம் திகதி துலாம் ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். எனவே தொழில் வளம் மேலோங்கும். சகோதர ஒத்துழைப்போடு சில நல்ல காரியங்களை நடத்தி வைப்பீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும் அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியிலும் ஆதாயம் கிடைக்கும்.

எதிர்வரும் செப்ரெம்பர் முதல் திகதி மீண்டும் சிங்கத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். எடுத்த காரியத்தை எளிதில் முடித்து வெற்றி காண்பீர்கள்.

எதிர்வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதி துலாம் ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 4,6க்கு அதிபதி 3இல் சஞ்சரிக்கும். பொழுது வழக்குகளில் வெற்றி கிடைக்கும். மனக்கசப்புகள் மாறும். மாற்றினத்தவர்களின் அனுகூலத்தோடு, கூட்டு முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

உங்களை விட்டு விலகிச் சென்றவர்கள் தானாகவே வ்ந்து சேரும் வாய்ப்பு உண்டு. செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கவும் செவ்வாய், சனி சேர்க்கையால் ஏற்படும் பாதிப்புகள் அகலவும் முருகப்பெரு மானை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வாக்கு ஸ்தானத்தில் பகை கிரகம் சஞ்சரிப்பதால் வளர்ச்சிக்கு இடையூறு வராமல் அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பத்தில் நிம்மதி குறையும். ஏற்பாடு செய்த சுபகாரியங்களில் தடைகளும் தாமதங்களும் உருவாகலாம்.

கணவன்- மனைவிக்குள் ஏற்படும் பிரச்சினைகளை மூன்றாம் நபரிடம் முறையிடாமல் இருப்பது நல்லது. மாதத்தின் மையப் பகுதியில் உறவினர் பகை கூடும். எனவே விரதங்களையும் வழிபாடுகளையும் முறையாக செய்தால் வெற்றி வாய்ப் புகளை இம்மாதம் எளிதில் பெறலாம்.

## கன்னி

(உத்தரம் 2,3,4, பாதங்கள், அத்தம் சித்திரை, 1,2 பாதங்கள் வரை)

**சொன்ன சொல்லை எப்பாடுபட்டாவது காப்பாற்றி விடவேண்டும் என்று துடிக்கும் கன்னி ராசி நோயர்களே!**

உதவிக்கரம் நீட்டுபவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பவர்கள் நீங்கள் தான். உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்துக் கொண்டு பேசமாட்டீர்கள். கள்ளம், கபடம் இல்லாதவர்கள் என்றும் சொல்லலாம். காரியவாதிகள் என்றும் சொல்லலாம். நல்லவர்களை நண்பர்களாகக் கொள்ளவேண்டுமென்று சொல்வீர்கள்.

ஆவணி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசிநாதன் புதன் மாத தொடக்கத்தில் விரய ஸ்தானத்தில் பலம் பெறுகிறார். எனவே ஒரு மடங்கு வரவு வந்தால் இரு மடங்கு செலவாகலாம். பையில் வைத்த பணம் மறுநிமிடமே பறந்து செல்கிறதே என்று கவலைப்படுவீர்கள். இது போன்ற காலங்களில் ஏதேனும் வீண் விரயங்கள் ஏற்படாமல் இருக்க வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவது நல்லது. அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பர பொருட்களை வரை வாங்குவதற்காக தயாரித்த பட்டியலில் ஒன்றிரண்டையாவது வாங்கிவிடுவது நல்லது.

குரு வக்ரமடைந்திருப்பது நன்மைதான். 4,7க்கு அதிபதியான கிரகங்கள் வக்ரம் பெற்றால் நமக்கு சாதகமான பலன்களை அது அள்ளிக் கொடுக்கும். எனவே ஜென்மச் சனியால் வரும் செலவுகளைச் சமாளிக்ககூடிய ஆற்றல் உங்களுக்கு வந்து சேரும். எனவே, சனியைக் கொண்டாடுங்கள், கும்பிடுங்கள் சந்தோஷத்தைக் காணுங்கள்.

ஓகஸ்ட் 22ஆம் திகதி கடக ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். ராசிநாதன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வருமானம் திருப்திகரமாக இருக்கும். வளர்ச்சி கூடும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். எதிரிகள் உங்கள் பலமறிந்து விலகுவர். இருப்பினும் ஜென்மச்சனியின் ஆதிக்கம் இருப்பதால் சிறு சிறு பிரச்சினைகள் வரத்தான் செய்யும். கடல் பயண வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்பவர்கள் சுய ஜாதகத்தின் பலம் அறிந்து செயற்படுவது நல்லது.

2,9இற்கு அதிபதியான சுக்ரன் தனஸ்தானத்தில் இம் மாதம் 31ஆம் திகதி முதல் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். பூர்வீக சொத்துக்களில் இலாபம் கிடைக்கும். பங்காளிப் பகை மாறும். தங்கம், வெள்ளி போன்றவைகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். எதிர்வரும் செப் டெம்பர் முதலாம் திகதி சிங்கராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். எனவே மறுநாளே திடீர் விரயங்கள் ஏற்படலாம். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது புத்திசாலித்தனமாகும்.

எதிர்வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதி முதல் செவ்வாயும் சஞ்சரிக்கப் போகிறார். 3,8க்கு அதிபதியாக செவ்வாய் விளங்குவதால் உங்கள் முன்னேற்றத்தில் சில முட்டுக் கட்டைகள் ஏற்படலாம். குறிப்பாக உடன் பிறப்புகள் வழியில் ஒத்துழைப்பு குறையும். சென்ற மாதத்தில் ஏற்பட்ட சில பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். சொத்துக்களால் வரவேண்டிய பாக்கிகளில் தாமதம் ஏற்படும். தொழில் பங்குதாரர்களிடம் விழிப்புணர்ச்சியாக இருப்பது நல்லது. சனி, செவ்வாய் சேர்க்கையால் ஏற்படும் சங்கடங்கள் அகல யோக பலம் பெற்ற நாளில் ஆஞ்சனேயர் மற்றும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப்பலன்கள்**

இம்மாதம் கூடுதல் கவனத்தோடு செயற்பட்டால் தான் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். உடன்பிறப்புக்களுக்காக ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உரு வாகும். அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டு வந்தாலும் மீண்டும் அடகு வைக்கும் அமைப்பு உண்டு. கணவன் -மனைவியரிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பக்கத்து வீட்டாரின் பகை கூடலாம். தெய்வ வழிபாடு திருப்தி தரும். (தொடரும்)

### சிவல்புரி சிங்காரம்




இளவாலை முள்ளானை கிராம அலுவலர் பிரிவில் கமநெகும திட்டத்தின் கீழ் பப்பாசிச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக சண்டிலிப்பாய் விவசாயப் போதனாசிரியர் தலைமையில் 10 பயனாளிகளுக்கு பப்பாசிக்கன்று வழங்கப்பட்டுள்தையும், அப்பிரதேசத்தில் இடம்பெற்ற வயல் விழா காட்சியையும் படங்களில் காணலாம்.

# அதிக சலுகைகள் வழங்க வேண்டுமென மாகாணசபை அமைச்சர்கள் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்க அமைச்சர்களுக்கு வழங்கப்படுவதனைப் போன்றே தமக்கும் சலுகைகள் வழங்கப்பட்ட வேண்டுமென மாகாண சபை அமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு வழங்கப்படும் அதே சலுகைகள் பிரதி அமைச்சர்களும் வழங்கப்படுவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அமைச்சரவை அமைச்சர் ஒருவருக்கு 15 ஊழியர்கள் வழங்கப்படுவதுடன் அதேயளவு ஊழியர்கள் பிரதி அமைச்சர்களுக்கும் வழங்கப்படுகின்றது.

மாகாண சபை அமைச்சர்கள் பத்து ஊழியர்களையே பணிக்கு அமர்த்திக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனினும் தமக்கு மேலதிகமாக ஊழியர்களை வழங்குமாறு மாகாண அமைச்சர்கள் முதலமைச்சர்களிடம் கோரிக்க்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு மேலதிகமாக ஊழியர்களை பணிக்கு அமர்த்துவதன் மூலம் அதிகளவு செலவு ஏற்படுவதாக மாகாணசபை நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை சிலபிரதேச சபைத் தலைவர்களும் தங்களுக்கு கூடுதல் சலுகைகள் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

(4-5)

# யுத்த நிறுத்த உடன்படிக்கையை விடுதலைப்புலிகளே வரைந்தனர்

## பேர்னாட் குணதிலக்க தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பே யுத்த நிறுத்த உடன்படிக்கையை உருவாக்கியதாக சமாதான செயலகத்தின் முன்னாள் தலைவர் பேர்னாட் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை தயாரிப்பதில் தமிழீழ விடுதலைப் புலிகள் நேரடியாக ஈடுபட்டதாகவும் அதனை நோர்வே நெறிப்படுத்தியதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் புலிகள் இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையை உருவாக்கினார்கள்.

அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க தற்போதைய வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்காற்றியுள்ளனர்.

யுத்த நிறுத்த உட்டன்படிக்கை தயாரிக்கப்பட்ட போது இலங்கை அரசாங்கத்திடம் கருத்து கோரப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(5-4)

# அம்பாந்தோட்டைத் துறைமுகம் படை நடவடிக்கைக்கு பயன்படுத்துவதில்லை

## வெளிவிவகார அமைச்சர் விபரிப்பு

அம்பாந்தோட்டை துறைமுகத்தை இராணுவ நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதில்லை எனவும் அதனை வர்த்தக துறைமுகமாக மாத்திரமே அரசாங்கம் பயன்படுத்தும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சீனாவின் பீஜீங்கில் தெரிவித்துள்ளார்.

பீஜீங் நகரில் இந்திய செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஆசியாவில் நாட்டிற்குள் இவ்வாறான துறைமுகம் ஒன்றை அமைத்த ஒரே நாடு இலங்கை எனவும் இப்படியான துறைமுகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் சில நாடுகளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக இராஜதந்திர தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனாவின் உதவியுடன், அந்நாட்டு பொறியிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களை பயன்படுத்தி அம்பாந்தோட்டை துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளது. இது குறித்து நாடாளுமன்றத்திலும் கேள்வி எழுப்பட்டிருந்தன.

இலங்கை சீனாவின் கொலனியாக மாறியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் குருணாகல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்திய செய்தியாளரின் கேள்விகளுக்கு பதிலளித்துள்ள அமைச்சர் பீரிஸ் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிர்மாணம் குறித்தோ அதனை இராணுவ தேவைகளுக்கு பயன்படுத்துவது தொடர்பிலோ இந்தியா எந்த கேள்விகளையும் எழுப்பவில்லை.

ஆரம்பத்தில் இந்த துறைமுகத்தின் நிர்மாணப் பணிகளை இந்தியாவுக்கு வழங்க இலங்கை அரசாங்கம் தயாராக இருந்த போதிலும் இந்தியா அதனை ஏற்க மறுத்துவிட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் கடனுதவியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள சந்தேகத்திற்கு மத்தியில் ஜனாதிபதியின் விசேட பிரதிநிதிகளாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் கடந்த 15 ஆம் திகதி இந்தியா செல்லவிருந்த நிலையில், அந்த விஜயம் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் 24 ஆம் திகதி இந்தியா செல்லும் இலங்கை பிரதிநிதிகள் 25, 26 ஆம் திகதிகளில் இந்தியாவில் தங்கியிருந்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர்.

(5-4-2)

# சரத்பொன்சேகாவை இனி ஜெனரல் என அழைக்கக்கூடாது

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவின் பெயருக்கு முன்னால் ஜெனரல் என்ற அடைமொழியைப் பயன்படுத்தக்கூடாது என இராணுவ நீதிமன்றின் தீர்ப்பிற்கு அமைய சரத் பொன்சேகாவை இனிவரும் காலங்களில் ஜெனரல் என அழைக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவ சேவைக்கு களங்கம் ஏற்படுத்திய நபரை இராணுவரீதியான அடைமொழிகளைக் கொண்டு அழைப்பது நியாயமற்றதென அவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு ஆவணத்திலோ அல்லது ஊடகங்களிலோ சரத் பொன்சேகாவை ஜெனரல் என அழைக்கக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

## 20 ஆண்டுகளுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த நாட்டின் தலைவராக பதவியேற்றிருந்தால் !

# அமைச்சர் டலஸ் கற்பனை



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இருபது வருடங்களுக்கு முன்பே நாட்டின் தலைவராக பதவி ஏற்றிருந்தால் இன்று நாடு பாரிய அபிவிருத்தியை அடைந்திருக்கும் என இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்கள் பூர்த்தியடைந்தமையை முன்னிட்டு அமைச்சில் நேற்று முன்தினம் நடை பெற்ற விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் டலஸ் அழகப் பெரும நிகழ்வில் மேலும் கூறுகையில்;


இற்றைக்கு 20 வருடங்களுக்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் தலைவராக பதவி ஏற்றிருந்தால் இன்று நாடு எவ்வாறான நிலைமையில் இருந்திருக்கும் என்று எம்மால் கற்பனை செய்ய முடிகின்றது. உலகில் எந்தவொரு நாட்டையும் உருவாக்குவதும் அபிவிருத்தி செய்வதும் அதேபோன்று அழிப்பதும் அந்நாட்டின் அரசியல்வாதிகள் தான். அரசியல்வாதிகள் நாடுகளை உருவாக்கிய மற்றும் நாடுகளை அழித்த சந்தர்ப்பங்கள் அதிகளவில் இருக்கின்றன.

இலங்கை வரலாற்றிலும் நாட்டை உருவாக்கிய சந்தர்ப்பங்கள் மற்றும் நாட்டை அழித்த சந்தர்ப்பங்கள் உள்ளன.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை பார்க்கின்ற போது ஒருவிடயம் ஞாபகம் வருகின்றது. அதாவது 1990ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் தலைவராக வந்திருந்தால் 1994ஆம் ஆண்டில் பயங்கரவாதப் பிரச்சினையை தீர்த்திருப்பார்.

அத்துடன் 1995 ஆம் ஆண்டு ஆகும்போது அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் , நுரைச்சோலை அனல் மின் நிலையம், மேல்கொத்மலைத்திட்டம் போன்ற பாரிய வேலைத்திட்டங்களை முடித்திருப்பார். (5-4-2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 4ஆம் திருவிழா



## நல்லை கந்தனுக்கு அரோகரா

நல்லைக் கந்தனுக்கு அரோகரா
ஆனைமுகத்தான் தம்பிக்கு அரோகரா
பொய்கையில் உதித்தவனுக்கு அரோகரா
மஞ்சை வாகனனுக்கு அரோகரா
வள்ளி மணவாளனுக்கு அரோகரா
ஆறுமுக சாமிக்கு அரோகரா
நற்றமிழ் வேலனுக்கு அரோகரா
வழிபட வாழ்வு தரும் முருகனுக்கு அரோகரா

ப.பபிஷன்

## தந்தைக்கு மந்திரம் சொன்னான்

மந்திரம் சொன்னான் தந்தைக்கு
மலையிலே நின்றான் பழத்திற்கு
செந்தூர் கொண்டான் அமைதிக்கு
செந்தமிழ் உண்டான் மகிழ்ச்சிக்கு

வேலோடு நின்றான் தீதழிக்க-படை
வீடுகள் கொண்டான் அன்பூட்ட
நூலினில் நின்றான் நெஞ்சம் மகிழ
நுண் பொருள் சொல்வான் நல்லூரிலே.

புலவர்.செ.பரமநாதன் மண்டைத்தீவு

## புது வாழ்வு தருவாயே!

ஆற்றங்கரையோனே ஆறுமுகப் பெரும் பொருளே
அல்லல் துடைப்போனே அலங்காரக் கந்தனே!
எல்லையில்லாப் பெருந் தெய்வம் எங்கள் முருகையா
ஏழைகளின் வாழ்வதனை ஏற்றமுறக்காப்பாயே!
தந்தைக்கு உபதேசம் செய்த முதல்வன் முருகா
தரணியிலே தவிப்போர்க்கு நல்வாழ்வு அருள்வாயே!
பூவரசு மரத்தோனே புதுமைகள் புரிபவனே முருகா
பூங்கா வனத் தெழுந்து எமக்கு புது வாழ்வு தருவாயே!

எஸ்.ரி.குமரன்.

## அலங்காரக் கந்தன்

ஆலய வீதியினிலே -எம்
அடியவரைக் காத்திடவே
அலங்காரத்துடன் வரும் -எம்
அலங்காரக்கந்தனே -உன்
உற்சவத்திருநாளில்
அடியவரைக் காத்திடு
அருளினைப் பொழிந்திரு.

க.வைஸ்ணவி, கல்வியங்காடு

நல்லைக் கந்தனின் திருவருள் வேண்டிப்
பிரார்த்திக்கின்றோம்.
பூபாலசிங்கம் புத்தக சாலை
இல.04,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 2226693


# இருபதாம் நூற்றாண்டு இலங்கை கல்வியில் அரசியல் அழுத்தங்கள்

## இலங்கையின் கல்வி வளர்ச்சிப் போக்குகள்

இலவசக் கல்வி நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் சுயமொழிக்கல்வி பயிலும் மாணவர்களின் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு, ஆங்கிலக் கல்வி பயிலும் மாணவர்களின் தொகையிலேற்பட்ட அதிகரிப்பை விட பன்மடங்காக இருந்தது. இலவசக் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்ட போது 1948 ஆம் ஆண்டு ஆங்கிலப் பாடசாலை மாணவர்களின் தொகை 1946 ஆம் ஆண்டைவிட 1இலட்சத்து 12 ஆயிரத்து 679 ஆல் அதிகரித்து விட்டது. அதே காலப்பகுதியிற் சுயமொழிப் பாடசாலை மாணவர் தொகை 1 இலட்சத்து 48ஆயிரத்து 625 ஆல் மட்டுமே அதிகரித்தது. ஆகவே இப்புள்ளிவிபரங்கள் இலவசக்கல்வி முறையின் விளைவாகப் பாடசாலை செல்லும் மாணவர்களின் வீதம் அதிகரித்ததைக் காட்டும் அதே வேளையில் ஆங்கில மொழிக் கல்வி சுயமொழிக் கல்வியை விட வேகமாக விரிவடைந்தமையையும் காட்டுகின்றது. ஆனால் இலவசக்கல்வி முறையினால் ஆங்கில மொழிக் கல்வி யாவருக்கும் கிடைக்கக் கூடிய வசதிகள் காணப்படவில்லை. சுயமொழிக் கல்வி பயிலும் மாணவர்கள் தொகை 1945 ஆம் ஆண்டின் பின்னர் அதிகரித்துச் சென்றதைக் காட்டும் புள்ளி விபரம் இதற்குத் தக்க சான்றாகும். 1946 ஆம் ஆண்டில் 6இலட்சத்து 67ஆயிரத்து 032 ஆக இருந்த சுயமொழிப் பாடசாலை மாணவர் தொகை 1956 ஆம் ஆண்டில் 13இலட்சத்து02ஆயிரத்து834 ஆக அதிகரித்தது. எனவே இலவசக் கல்வி நடை முறையில் இருந்த போதும் இக்காலப் பகுதிகளிற் புதிதாகச் சேர்ந்த 6 இலட்சத்து 35ஆயிரத்து 802 மாணவர்கள் அவ் வசதியைப் பயன்படுத்தி ஆங்கில மொழிப் பாடசாலைகளில் சேர முடியாது இருந்தது எனலாம்.

1945 ஆம் ஆண்டு இலவசக்கல்விக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டதும் அது வரைகாலமும் ஆங்கில மொழிக் கல்வியை பெற கட்டணம் செலுத்தி வந்த பொருளாதார வசதியுள்ள வகுப்பினர் இதன் பின் அதே கல்வியை இலவசமாக பெற்றமை உடனடியாக ஏற்பட்ட மாற்றமாகும். நீண்டகாலமாக இலவசமாக வழங்கப்பட்டு வந்த தரம் குறைந்த கல்வியையே வசதி குறைந்த வகுப்பினர் தொடர்ந்தும் பெற்றுவர நேரிட்டது.

ஆகவே இலவசக் கல்வி நடைமுறையில் வந்த பின்பும் போதனா மொழி அடிப்படையிலான குறை பாடுகள் நிறைந்த இருவகைப் பாடசாலை முறை நீடித்து நிலவியது. அத்துடன் இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அதன் உடனடி விளைவாகப் பாடசாலைக் கல்வியில் பங்குபற்றுவோர் தொகையிலோ அல்லது ஆரம்பக்கல்விக்கு அப்பால் கல்வியை தொடர்வோர் தொகையிலோ குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரிப்பை ஏற்படுத்தவில்லை. மறுபுறத்தில் ஆங்கில பாசாலைகளில் சூழலும் போதனா மொழி ஆங்கிலமாக இருந்த வேளையில் குறிப்பிட்ட பாடசாலைகளில் கிராமப் பிள்ளைகளும் சேர்ந்து படிப்பதற்கு உரிய வாய்ப்புக்களும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. இன்னொரு கட்டத்தில் ஆரம்பக்கல்வியை தாய் மொழியிலே பெற்றுக் கொண்ட பிள்ளைகளைத் தொடர்ந்து இடை நிலைக் கல்வியை பெறுவதற்கும் ஆங்கில மொழிக் கொள்கைகள் தடையாக அமைந்தன. இக் காரணத்தினால் பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் பல பாடசா லையில் இருந்து விலக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே இத்தகைய பிரச்சனை களுக்குத் தீர்வு காண முற்படுகையிலே கல்வியைத் தாய் மொழியிலே வழங்க வேண்டும் என்ற கருத்து மேலோங்கியது.

சுதந்திரத்திற்கு மிக அண்மைக்காலம் வரை இலங்கையில் இருந்த எல்லாச் சுய மொழிப் பாடசாலைகளும் ஆரம்ப பாடசாலைகளாகவே விளங்கின.

அப்பாடசாலைகள் எழுத்து, வாசிப்பு, எண் முதலியவற்றுடன் சிறிதளவு முன்னேற்றமான கல்வியையே அவை கற்பித்து வந்தன. நவீன கல்வியைக் கற்பித்த ஆங்கிலப் பாடசாலைகளை விட அவை எல்லா விதத்திலும் தரத்தில் குறைந்தவையாக காணப்பட்டன. சுயமொழிக் கல்விக்காக வசதிகள் மிகவும் பின்தங்கிக் காணப்பட்ட அதே வேளையில் ஆங்கிலக்கல்வியை பெறுவதற்கான ஊக்கமும் ஆங்கில மொழிக் கல்விக்கு வழங்கப்பட்டது போல வழங்கப்படவுமில்லை.

எனவே இவ்வாறான நிலைமைகள் காரணமாகவே சிங்கள, தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி மொழிகள் முறையே சிங்களமும் தமிழுமாக இருக்கவேண்டும்என1945ஆம்ஆண்டு அரசாங்க சபை தீர்மானித்தது. ஆரம்ப நிலை, இடைநிலை, உயர்நிலை ஆகிய மூன்று கல்வி நிலைகளிலும் படிப்படியாக ஆங்கிலம் நீடிக்கப்பட்டபோது சிங்களத்திற்கும் தமிழுக்கும் இடமளிக்கப்பட்டது. ''தேசிய நோக்கில் ஆங்கிலம் போதனா மொழியாக அமைவது ஒரு தவறான தெரிவு'' என்றும் ''தாய் மொழிக்கு நாம் அளிக்கும் பெரும் முக்கியத்துவத்தை சிறுபான்மையினருக்காக கைவிட ஆயத்தமாகவில்லை'' என்றும் கூறிய விசேட கல்வி ஆணைக்குழு (1943) ஆரம்ப பாடசாலையிலே தாய் மொழியே போதனா மொழியாக இருக்க வேண்டும் என்றும் விதந்துரைத்தது. விசேட கல்விக் குழுவின் அறிக்கை பிரசுரிக்கப்பட்ட போது அரசாங்க சபை சிங்களமும் தமிழும் அரச கரும மொழிகளால் ஆக்கப்படல் வேண்டும் என்று தீர்மானிக்கப்படவில்லை. எனவே குழு, அரசாங்க மொழி ஒன்றாக இருக்கக் கல்வி நிலையங்களிற் வேறொன்றாக இருப்பதனால் எழக் கூடிய பிரச்சனைகளை எதிர்நோக்கியது. எல்லாவகையான கல்வி நிலைகளிலும் தாய்மொழியே போதனா மொழிகளாக மாற்றப்பட்டு விடும் என்பதை எதிர்பார்த்த விசேட குழு ஆங்கிலமொழியேநிர்வாக மொழியாக இருந்தமையால் மூன்றாம் வகுப்பில் இருந்து ஆங்கிலம் கட்டாயமாக இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படல் வேண்டும் என்றும் குழு விதந்துரைத்தது .எனவே எந்த மட்டத்திலும் தாய் மொழி மூலமாக கல்வி புகட்டப்படுவதை இச்சிறப்புக் குழு விரும்பிய போதிலும் ஆரம்பமட்டத்திலேயே இது சாத்தியமாகும் என கருதப்பட்டது. உயர் வகுப்பு மட்டங்களில் இரு மொழி அல்லது மும்மொழிகளில் ஒன்றாகத் தாய் மொழி அமைய முடியும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. 4

அத்துடன் சுய மொழிக் கல்வி என்பது சுதேசிய மொழிக் கல்வி என்பதில் இருந்து வேறு படுவதாக காணப்பட்டது. காலப் போக்கில் ஏற்பட்ட சூழ்நிலை மாற்றங்கள் தேவைகள் ஆட்சியாளருடைய நிர்வாக மொழியில் மட்டு மன்றி, கல்வி மொழிக் கொள்கைகளிலும் மாற்றங்கள் அரசியல் அழுத்தங்கள் மூலம் ஏற்பட் டமையை அவதானிக்க முடிகின்றது.

**நாகேஸ்வரி விஜயகாந்தன்**

சுயமொழிக் கல்வி மாற்றங்கள் பலவழிகளாலும் முன்வைக்கப்பட்டபோது அவற்றை அனுசரித்துச் செல்ல வேண்டிய கட்டாய நிலை ஆட்சியாளருக்கு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் கல்வி மொழியில் தாய் மொழி பற்றிய தெளிவற்ற நிலைமைகள் காரணமாக 1951 ஆம் ஆண்டு வரை ஆங்கில மொழிக் கல்வி தொடர்ந்தும் நிலைத்திருந் தது. காலப் போக்கில் விசேட கல்விக்குழு வின் முக்கிய கொள்கைகள் அரசாங்க சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் எல்லாக் கல்வி நிலைகளிலும் தாய்மொழியை போதனா மொழியாக்கும் குறிக்கோள் அரசின் முக்கிய விடயமாகக் கருத்தில் கொள்ளப்பட்டது. 1960களின் ஆரம்ப காலப்பகுதியில் பல்கலைக்கழக மட்டத்திலும் குறிப்பாக கலைத்துறை பாட நெறிகளைத் தாய் மொழியிற் பயிலுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. (தொடரும்)

# ஐரோப்பிய நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் விலை அதிகரிக்கும்

## கொழும்பு ஊடகத்திற்கு ஐரோ.தூதுவர் பேட்டி

(கொழும்பு)

இலங்கை தற்போது ஜி.எஸ்.பி வரிச் சலுகையை இழந்துள்ளதால் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு வரி செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.' இதனால் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருட்களின் விலை அதிகரிக்கும் என இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் பேர்னாட் காவேஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள பேட்டியில் தெரிவித்ததாவது,

**இலங்கை அரசு ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை இழந்துள்ளது. இந்த நிலையில் நாட்டில் உள்ள சிறிய தொழிற்சாலைகள் மூடப்படுவதற்கு இது வழிவகுக்குமா?.**

தொழிற்சாலைகள் வேறு நாடுகளுக்கு நகர்த்தப்படுவது தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது. இதன் தாக்கம் என்ன என்பதை தற்போது கூறுவது கடினமானது.

**ஆனால் இலங்கையுடன் பேச்சுக்களை மேற்கொள்ள ஐரோப்பிய ஒன்றியம் தற்போது விரும்புகின்றதா?**

ஆம் ,கடந்த 15ஆம் திகதியுடன் கால எல்லை முடிவடைந்துள்ள போதும் இலங்கை அரசுடன் நாம் பேச்சுக்களை மேற்கொள்ள விரும்புகிறோம் என்பதை தெரிவித்துள்ளோம்.

**ஜி.எஸ்.பிளஸ் விவகாரம் தொடர்பில் ஐரேப்பிய ஒன்றியத்துடன் இலங்கை அரசு நியாயமான வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தாக நீங்கள் கருதுகிறீர்களா?**

இந்தக் கேள்வி இலங்கை அரசிடம் கேட்கப்படவேண்டியது என நான் கருதுகிறேன். நாம் எப்போதும் போலவே நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

**ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை பெறுவதற்கு நிபந்தனைகளை விதிப்பது நியாயமானது என நீங்கள் கருதுகிறீர்களா?**

கடந்த சில வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் முழுவதையும் நீங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த நட வடிக்கைகளின் பிரகாரம் நாம் இலங்கை அரசை பல வழிகளில் ஊக்கப்படுத்தியிருந்தோம். எல்லாநடவடிக்கைகளும் ஜிஎஸ்.பிபிளஸ் வரிச்சலுகையின் அடிப்படை விதிகளைக் கொண்டுதான் மேற்கொள்ளப் பட்டிருந்தன. வரிச்சலுகையின் ஆரம்பத்தில் அரசு எமது நிபந்தனைகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்ததுடன் அதில் நெருக் கடிகள் ஏற்படவில்லை.

**ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையின் இழப்பினால் நாடு என்ன தாக்கத்தை எதிர் கொண்டு ள்ளது?**

இது இலங்கை எந்த வகையில் பாதிக்கும் என்பது தொடர்பில் ஆய்வு செய்த தகவல்கள் என்னிடம் இல்லை. இலங்கை தற்போது வரிச்சலுகையை இழந்துள்ளதால் அது ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு வரியை செலுத்த வேண்டிய நிலையில் உள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட் களின் விலையை இது அதிகரிக்கும் என்பதே தற்போதைய தாக்கம். ஆனால் இது தொழிற்சாலைகளை எவ்வாறு பாதிக்கும் என்பது தெளிவற்றது தற்சமயம் எண்ணிக்கை ரீதியான கணிப்பீடுகளை மேற்கொள்வது கடினமானது. (5-4)

## இளைஞர்,யுவதிகளுக்கான அரங்கியல் பயிற்சிகள்

(கொழும்புத்துறை)

திருமறைக் கலாமன்றத்தின் வளவாளர்களினால் இளைஞர், யுவதிகளுக்கான அரங்கியல் பயிற்சிகள் தற்போது சில்லாலை, குப்பிளான்,உடுப்பிட்டி மற்றும் இளவாலை ஆகிய பகுதிகளில் நடைபெற்று வருகிறது.

இளைஞர்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் இப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதில் குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட எதிர்கால சந்ததியினரை ஆற்றுப்படுத்தும் நோக்கில் இவ்வரங்கப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

திருமறைக் கலாமன்ற வளவாளர்களால் அர்ப்பணிப்புடன் செயற்படுத்தப்படும் மேற்படி நாடகப் பயிற்சிகள் எதிர்காலத்தில் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக வளவாளர்களுக்கான பொறுப்பாளர் சி.எம்.நெல்சன் தெரிவித்துள்ளார். (2-51)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(தொண்டைமானாறு)


தொண்டைமானாறு கெருடாவில் தெற்கு J/385 கிராம சேவையாளர் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் இராணுவத்தினர் டெங்கு ஒழிப்பு பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதுடன் சிரமதானத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். கிராம சேவையாளர் வே.வன்னிமரம் தலைமையில் வீடு வீடாக சென்று இராணுவத்தினர் இவ் நடவடிக்கையில் ஈடுபடுவதாக குறிப்பிடப்படுகிறது. (4)

# ஈழத்தவர் வரலாறு 8

## (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

பெருங்கற்காலப் பண்பாடு பற்றி இலங்கையிற் பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள



சுன்னாகத்தில் ( யாழ்ப்பாண மாவட்டம் ) அகழ்ந்தெடுக்கப்பட்ட புத்தர் சிலை ஆன்றோ ருக்கு அமராவதி சிற்பப்பாணியில் அமைந் துள்ளது. இது 5 ,6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.தற்பொழுது அனுராதபுரத்து தொல்லியல் அரும்பொருளகத் தில் உள்ளது.

சான்றுகள் இலங்கையின் நாகரீக வரலாறும், சிங்கள மக்களின் மூதாதையினரும் வட இந்தியத் தொடர்பால் ஏற்பட்டது என்று பாரம்பரிய கருத்தை முற்றாக நிராகரித்துள்ளனர்.

ஈழத்தில் ஆதிக்குடியேற்றம் நிகழ்ந்ததாகப் பாளி இலக்கியங்கள் குறிப்பிடும் பகுதிகளை உற்றுநோக்கும் போது பெருங்கற்கால மக்களது குடியிருப்புக்களையே பாளி நூல்கள் விஜயன் கூட்டத்தினரின் குடியிருப்புகள் என அழைத்துள்ளமை தெளிவாகின்றது என சிற்றம்பலம் குறிப்பிடுவது ஏற்கத்தக்கது.

எனவே வட இந்தியக் குடியேற்றத்திற்கு பதிலாக தென்னிந்தியக்குடியேற்றமே நடந்தது என்பதும் இம்மக்கள் அப்போது இங்கே காணப்பட்ட தற்கால மக்களின் கலாசாரத்தின் மேல் தமது கலாசாரத்தை திணித்தனர் எனவும் கொள்ளலாம். இங்கு காணப்பட்ட கற்கால மக்களே பாளி நூல்களில் இயக்கர்கள்,நாகர்கள் என அழைக்கப்பட்ட அமானுஷ்யர்களாவர். எனவே ஈழத்தின் நாகரிக கர்த்தாக்கள் திராவிடரே என்பது புலனாகின்றது.


சிங்கள விஜயனைத் தொடர்ந்து இலங்கைக்கு வந்த சீகளர் இங்கு வாழ்ந்த ஆதித் திராவிடரின் பிரதேசங்களின் குடியேற்றங்களை நிறுவி நிலைபெற்றதோடு அம்மக்களுடனும் கலப்பினை ஏற்படுத்திக் கொண்டனர். பெரும் கற்காலத்தில் ஈழத்தில் இருந்து வளர்ந்த மொழிகளாக எலு ,தமிழ் என்பன விளங்கின.

இயக்க மக்கள் எலு மொழியையும் நாகர்கள் தமிழையும் பேசினர். எலு மொழி பேசிய இயக்க மக்களுடன் தற்கால சிங்கள மக்களின் மூதாதையினர் கலந்து பௌத்தத்துக்கு மாற பாளி மொழியின் தாக்கம் ஏற்பட்டுச் சிங்கள மொழி உருவாகியது என்பதே அறிஞர்களின் கருத்தாகும்.

வடநாட்டில் இருந்து வந்த பௌத்தமதச் கலாசாரத்தினால் எலுமொழி பேசிய திராவிட மக்களாகிய சிங்கள மக்களின் கலாசாரம் தனியான பாதையின் தமிழ் இந்துக் கலாசாரத்தை விட்டு விலகிச் சென்றது எனச் சிற்றம்பலம் கருதுகிறார்.

எனவே பௌத்த மதத்தின் வருகைக்கு முன் இலங்கைத் தீவில் திராவிட ஆதிக்குடிகள் வாழ்ந்து வந்தனர்.

கிறிஸ்துக்கு முன் 483 இன் பின் அலை அலையாக நிகழ்ந்த தென்னிந்திய குடியேற்றங்களும் சில இடத்து வட இந்திய குடியேற்றங்களும் பௌத்தத்தின் வருகையை பாளி மொழியும் புதியதொரு சிங்கள-பௌத்த கலாசாரத்தை தென்னிலங்கை உருவாக்கக் காரணமாயின. அதேவேளை தமிழ் -இந்து கலாசார வடக்கு-கிழக்குப்பிரதேசங்களில் நிலை பெற்றது. ஆகவே இலங்கைத்தீவு மொழி வாரியாக இரண்டு இனங்களுக் குரியதாக விளங்கி வருகின்றது.



நிலாவெளியில் (திருகோணமலை மாவட்டம்) காணப்படும் தமிழ்க்கல்வெட்டு. இது மற்சியேஸ் வரக் கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலத்தானம் பற்றியது. ஏறத்தாழ 10ஆம்நூற்றாண்டு.

(தொடரும்)

**ஈழத்தவர் வரலாறு என்னும் தலைப்பில் கலாநிதி க.குணராசா (செங்கையாழியான் ) எழுதிய தொடரில் நாளை முதல் வரலாற்றுக்கால தமிழ் மன்னர்கள் என்னும் தொடர் பிரசுரமாகும்.**

# சைவ சித்தாந்த முத்தியும் சங்கரவேதாந்த முத்தியும் 2

## ஓர் ஒப்பீட்டாய்வு

### செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

பேராசிரியர் நா.ஞானகுமாரன்
பீடாதிபதி ,கலைப்பீடம் ,
யாழ்.பல்கலைக்கழகம்

இக்கன்மம், ஆகாமியம், பிராரத்துவம், சஞ்சிதம் எனும் மூன்று நிலைகளுக்குட் பட்டுப் பிறப்பிறப்புகளுக்கு வழி கோலுகின்றன. இக் கன்மச் செயற்பாட்டில் மாயை மலத்தின் பங்கும் குறிப்பிடத்தக்க அளவில் அமைகிறது. மாயை தனு, கரண, புவன போகங்களை ஆன்மாக்களுக்கு வழங்குகின்றன.



இம் மாயகாரியங்கள் பிணியாக அமைகின்ற வேளையிலும் இக்காரியங்களைக் கொண்டே ஆன்மாக்கள்மலங்களினின்று கரையேறுவதற்கும் வாய்ப்பாகின்றன. இம் மாய காரியங்களை ஆன்மாக்கள் முறையாகப் பயன்படுத்தும் தரத்திலேயே முத்திக்குரிய பாதை தெளிவிற்குரியதாகின்றது. மாயை அளிக்கும் சரீரங்களும் சரீர சம்பத்துக்களும் மயக்கங்களை அளிக்கவல்ல தென்பதனைச் சித்தாந்தம் எடுத்தாளுகின்ற போதிலும் இவை ஆன்மாக்களின் விடிவுக்கு உதவவல்ல ஒளியாகலாமென்பதாலேயே,

"மாயா தனு விளக்காய்" என மெய்கண்டதேவரும்,

"விடிவாமளவும்விளக்கனைய மாயை"

என உமாபதி சிவாச்சாரியாரும் சுட்டி நிற்பது அவதானிக்கத் தக்கதாகும். இவ் விளக்கு மங்கியதான ஒளியையே தரவல்ல தாயினும் அவ்வொளியில் ஆன்மா தன்னி லையைச் சற்றே உணர்ந்து சரியான பாதை யைத் தேர்ந்தெடுப்பது சாத்தியமாகின்றது. இதனால் ஆன்மாவின் செயற்பாட்டுக்கு அனாதியாயுள்ள மும்மலங்களுள் இருமலங்களும் உபகாரிகளாக அமைகின்றதெனக் குறிப்பிடுதல் தவறாகாது.

அதேவேளை ஆன்மா விடுதலை அடைவதற்கு இறைய ருளைக் கூடி நிற்றலும் அறிதற்குரித்தாம். ஞாணநிலைக்கு அல்லது வெளிபடாத முதல் வன் உயிருடன் உடனாய் நின்று உயிர் அறி தற் பொருட்டுத் தான் அறிந்தும் அவ்வுயிருக்கு பிறிதாக அமையாமல் உயிர் தானே எல்லாவற்றையும் அறிந்ததாக எண்ணும் வண்ணம் உயிரோடு பிரிவின்றிக் கலந்து நிற்பான் என அறியலாம். இவ்வாறே இறுதி நிலையிலும் பிரிவின்றிக் கலந்து இரண்டற்று விளங்கா நிற்பான் ஆன்மாக்களின் பக்குவநிலைக்கமைய இறைவன் குரு வடிவில் வந்து ஆன்மாக்களின் பந்தப் பிணி யறுத்து அருளுவான் எனச் சித்தாந்தம் குறிப்பிடும். ஆணவ மலம் ஒன்றினைக் கொண்டு விளங்கும் பக்குவமடைந்த விஞ்ஞான கலருக்கு அறிவில் நின்றே அருள்வான் என்றும் ஆணவம், கன்மம் எனும் இரு மலங்களுடைய, பக்குவமுடைய பிரளயாகலருக்கு நேரில் அருளுவான் என்றும் மும்மலங்களாலும் பிடிக்கப்பட்ட, பக்குவம் வந்த சகலருக்கு குருவடிவில் வந்தருளுவான் என்றும் எடுத்தாளப்படுதல் நோக்குதற்குரியது.

ஆணவ இருளானது அருளை மறைக்கின்றது. இருள் விலகுவதற்கு எமது முயற்சியுடன் இறைவன் துணையும் கூடிநிற்றல் அவசியமனதாகும். அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பது போல 'அவனருளாலேயே அவன் தாள் வணங்குதல் சாத்தியமாகின்றது. மெய்கண்டரும் அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யானாகவே எனச் சுட்டி நிற்றல் காணலாம். இதனையே கந்த புராணமும் பின்வருமாறு தெளிவாக விளக்கி நிற்றல் காணலாம்.

"அவனருள் பெறாது முத்தி யடைந்தனரில்லை யல்லா
வனருளின்றி வாழ மமரரும் யாரு மில்லை
யவனரு ளெய்தி னெய்தா வரும் பொருளில்லை யானை
யவனல திறைவனில்லை யவனை நீ அடைதி யென்றான்" என இறையருள் இணைவு முத்திக்கு துணை போவது தெளிவுறுத்தப்படுதல் காணலாம். இத்தன்மையே காரைக்காலம்மையாரையும் "அருளாலே மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்"

என எடுத்தாள் வைத்தமையைக் காண்கின்றோம்.

வேதாந்தமானது மாயையே அனைத்து அறியாமைக்கும் மயக்கத்திற்கும் மூலமென எடுத்தாளும். மாயையின் நீக்கமே ஞானத்தை உணர்வதற்கு வழிவகுக்கின்றதென்பர். எனினும் சத்வம், ரஜஸ், தமஸ் எனும் மூன்று குணங்களை மாயை கொண்டதென எடுத்தாளும் வேதாந்தமும் சைவ சித்தாந்தமும் மாயையின்இயல்பு நிலையை விளக்குகையில் வேறுபட்டு நிற்கும். சித்தாந்தம் மாயையானது ஓரளவு அறிவைப் பெறுவதற்கு உதவவல்லது என ஏலவே குறிப்பிட்டது போல விளக்க வேதாந்தம் இத்தன்மையை மறுத்துரைப்பதாகின்றது. இங்கு வேதாந்த மாயையானது சித்தாந்த ஆணவத்தின் செயல் நிலையினையும் கொண்டதாக விளங்குகின்ற தெனலாம்.

துன்பம் துளியுமிலாப் பேரின்ப நிலையே முத்தி எனும் போது அதனை அடைவதற்குப் பல மார்க்கங்களைச் சித்தாந்தம் எடுத்தாளுகின்றது. உலகியலறிவோடு இருக்கும் பாச ஞானத்திலிருந்து விடுபட்டுத் தன்னை உணர்விக்கும் பசு ஞானம் இறையியலுக்கு முக்கியமானதாகும். பசுஞான வளர்ச்சியில் பதி ஞானம் கைவரப்பெறும். அங்கு ஆன்ம சிற்சக்தியின் செயல்திறம் உணரப் பெறலாம். ஆன்மாவின் தன்மையை உணரும் உந்துசக்தியாக ஆன்ம சிற்சக்தி அமை கின்றதென்பதும் தன்னை உணரும் வழி சிவத்தின் தன்மையில், அதாவது தன் நிலை யை அறிகின்ற அடிப்படையில் சிவத்தை உணரும் தன்மையில், ஆன்ம சிற்சக்தி சிவ சிற் சக்தியாய்ப் பரிணமிக்கின்ற தென்பதும் சைவசித்தாந்தம் எடுத்தோம்பும் சிந்தனைக ளாகும்.

இறைவனை அடைதலையிட்டு சிவாக்கிரக யோகிகள் பின்வரும் கருத்தை எடுத்தாள்வதும் அவதானித்தத்தக்கது. (தொடரும்)

# “சன் சீ” கப்பல் மூலம் வந்தவர்களுக்கு கனடா அகதி அந்தஸ்து வழங்கக் கூடாது

## இலங்கை அரசு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இருந்து “சன் சீ” கப்பல் மூலம் கனடாவுக்கு வந்துள்ள 490 பேருக்கு அகதி அந்தஸ்து வழங்கக்கூடாது என இலங்கை அரசாங்கம் கனடாவிடம் கோரியுள்ளது.

இலங்கையின் கனடிய உயர்ஸ்தானிகர் சித்திராங்கனி வாகீஸ்வரர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். கனடாவுக்கு வந்த கப்பலின் தலைவராக செயற்பட்ட வினோத் என்பவர் புலிகள் இயக்கத்தின் சிரேஷ்ட தலைவர் என்பதுடன் ஆயுதக் கடத்தல்களுடன் தொடர்புபட்டவர் என சித்திராங்கனி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை “சன் சீ” கப்பல் மூலம் கனடாவுக்கு வந்தவர்கள் ஆட்கடத்தல் நடவடிக்கையாளர்களால் அழைத்து வரப்பட்ட அகதிகள் என கனடா தெரிவித்துள்ளது.

எல்லைப் பாதுகாப்பு அலுவலக அதிகாரி ரொப் ஜோன்ஸ்டனின் தகவல் படி இவர்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட நிலையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

கூடாரங்களுக்கு பயன்படுத்தப்படும் துணிகளைக் கொண்டு கப்பல் விஸ்தரிக்கப்பட்டிருந்தது. அதிகளவிலான பொது மக்களை ஏற்றி வரும் பொருட்டே அவ்வாறு செய்யப்பட்டிருந்தது.

அதே நேரம் கப்பலில் பயணித்தோரின் சுகாதாரப் பணிகள் தொடர்பில் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஒரு பகுதியிலும் ஆண்கள் வேறு பகுதிகளிலும் இருந்தே கப்பலில் பயணித்துள்ளனர்.

இதேவேளை, குறித்த கப்பலில் வந்த இலங்கை அகதிகள் அப்பாவிகளாக தென்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். அகதிகளில் 350 ஆண்களும் 50 பெண்களும் மற்றும் 50 சிறுவர்களும் இருந்துள்ளதாகவும் ரொப் ஜோன்ஸ்டன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து சென்றுள்ள 490 அகதிகள் தொடர்பில் கனடாவின் எழுந்துள்ள எதிர்ப்பு அலைகளை தமக்கு வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள கனடாவில் உள்ள சிங்கள அமைப்புக்கள் முயற்சிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே தமிழ் அகதிகள் வருகையை எதிர்த்து பிரிட்டிஸ் கொலம்பியா மாநிலத்தில் உள்ள மக்கள் தமக்கு தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்தி வருவதாக அந்த மாநிலத்தின் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்திருந்தார்.

முன்னர் 2 ஆயிரம் பேர் வருவதாக கூறப்பட்டபோதும் பின்னர் 490 அகதிகள் தமது மாநிலத்திற்கு வருவதை கேள்வியுற்ற நிலையிலேயே இந்த எதிர்ப்பை அவர்கள் வெளியிட்டுள்ளதாக குறித்த பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் கனடாவில் இயங்கும் பிரண்ட்ஸ் ஒப் கனடா (கனடாவின் நண்பர்கள்) என்ற சிங்கள அமைப்பின் அறிக்கையொன்றில், இலங்கை அகதிகள் தொடர்பில் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

அதில் இலங்கையில் தற்போது போர் நிறைவடைந்து இயல்பு நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இலங்கை தமிழர்களுக்கு கனடா, அகதி அந்தஸ்தை வழங்கக் கூடாது என அந்த அமைப்பு கோரியுள்ளது. ஆட்கடத்தல் நடவடிக்கையின் அடிப்படையிலேயே இலங்கை அகதிகள் கனடாவுக்கு வந்துள்ளனர்.

எனவே இந்த இலங்கை தமிழ் அகதிகளுக்கு அரசியல் அந்தஸ்து வழங்குவது, தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு உரமூட்டுவதாக அமையும் என குறித்த சிங்கள அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (5-4-2)

## ஜேர்மனிய செனற்றராக இலங்கையருக்கு வாய்ப்பு

ஜேர்மனியில் வாழும் பிரபல கோடீஸ்வர வர்த்தகரும் இலங்கையருமான 70 வயதுடைய கிருகரன் ஜேர்மனிய செனற்றர்களில் ஒருவராக நியமிக்கப்படவுள்ளார்.

அந்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான அம்பேக்கை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் பொருளாதார விவகாரங்களுக்கான செனற்றராக அவர் நியமிக்கப்படவுள்ளார்.

செனற்றர் அக்செல் ஜென்டாஸ்கோ என்பவரின் இடத்திற்கு இவர் நியமிக்கப்படுகின்றார். வெளிநாடு ஒன்றில் இருந்து குடியேற்ற வாசியாகச் சென்ற ஒருவர் ஜேர்மனியில் செனற்றராகின்றமை இதுவே முதல் தடவையாகும்.

இவர் சுமார் 30 வருடங்களுக்கு முன் ஜேர்மனியில் குடியேறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5-4-2)

## உற்சவகால விசேட பூசைகள்

(பொன்னாலை)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் புதுப்பித்து திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு பாலஸ் தாபனம் செய்யப்பட்டுள்ளதால் ஆவணி மாதம் நடைபெறும் கிருஷ்ணஜெயந்தியை ஒட்டி மஹோற்சவகாலம் முழுவதும் விசேட அபிஷேகம், பூஜை, அர்ச்சனை என்பன நடைபெறுகின்றன.

இதில் தேர்த்திருவிழா நாளான எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை இரவு கிருஷ்ண ஜெயந்தி தினவிழா பஜனைகள் இடபெறும். அத்துடன் உற்சவ காலத்தில் தினமும் காலை 10 மணிக்கு அபிஷேகம், பூஜை திருவாய்மொழி பாராயணம், அர்ச்சனை என்பன இடம்பெறவுள்ளன. (4-3)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### வெள்ளைப் பூண்டு

Botanical Name- Allium Sativum
Family - Liliaceas
Engl - Garlic
Sinh - Suthu lunu

இது ஒரு பல பருவ குறுஞ்செடியாகும். இதன் தரைக் கீழ்த்தண்டு குமிழ் (Bulb) வகையினது, 1மீற்றர் உயரம் வளரக்கூடியது, பசுமைத் தண்டு உருளை வடிவினது, மலர்த்தண்டு ஸ்கேப் எனப்படுகின்றது. மலர்கள் வெண்மையானவை, குடைபோன்றது, தரையடித் தண்டு மூலம் வளர்க்கப்படுகிறது. விதைகள் அரிதாக உருவாகின்றன.

**இனவிருத்தியும், பரம்பலும்**

வெள்ளைப் பூண்டின் தாயகம் மத்திய ஆசியா ஆகும். வடிகால் வசதியுள்ள களி மண் கலந்த அல்லது குறுமணல் கலந்த நிலம் பயிர்ச்செய்கைக்கு உகந்தது. குளிர்ச்சியான காலத்தில் வளரும் தன்மை கொண்டது. ஆனி, ஆடி அல்லது ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் நாட்டப்படுகின்றன. வெள்ளைப் பூண்டின் வயது 90-100 நாட்கள் ஆகும். பயிர் முற்றியதன் அறிகுறியாக அதன் இலைகள் பசுமை இழந்து காய்ந்துவிடும்.

100 கிராம் உலர்ந்த பூண்டில் உள்ள சத்துக்கள்.

| சத்துக்கள் | அளவுகள் |
|---|---|
| புரதம் | 6.3 கிராம் |
| கொழுப்பு | 0.1 கிராம் |
| நார்ப்பொருள் | 0.8 கிராம் |
| காபோவைதரேற்று | 28.8 கிராம் |
| கல்சியம் | 30 மி.கி |
| பொஸ்பரஸ் | 310 மி.கி |
| இரும்பு | 1.3 மி.கி |
| தயமின் | 0.06 மி.கி |
| ரைபோபிளேவின் | 0.23 மி.கி |
| நியாசின் | 0.4 மி.கி |
| விற்றமின் ‘C’ | 6மி.கி |
| சக்தி | 140 கி.கலோரி |

காணப்படும்.

**✸ மருத்துவப் பண்புகள்**

இதன் குமிழில் *பூண்டுப்பற்கள்* எனும் (cloves) பகுதிகள் உள்ளன. இவற்றை நசுக்கினால் நெடியான வாசனை வரும். இதுவே இதன் மருத்துவப் பண்புகளின் அடிப்படையாகிறது.

நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள் தயாரிப்பதற்கு ஆதிகாலத்தில் பூண்டு அனைத்து வகையான நோய்களுக்கும் மருந்தாக பயன்பட்டது. பூண்டு ரசம் உடல்வலியை போக்கும். தாய்மார்களுக்கு பால் சுரக்க உதவும் உடலுக்கு வலு உண்டாக்கும். பூண்டு ஓர் காய கற்ப மூலிகையாகும்.

நீண்ட ஆயுளைப் பெற விரும்புவோர் ஏதாவது ஒரு விதத்தில் பூண்டை தங்கள் உணவோடு அன்றாடம் சேர்த்துக் கொள்ள




வேண்டும்.

♦ **சீதபேதிக்கு** : ஒரு பூடு உள்ளியை எடுத்து மேற்றோலை அகற்ற வேண்டும். கறியுப்பு சிறிது எடுத்து கொஞ்சமாக நீர்விட்டு பிசைந்து, பின் அதை ஒரு பூண்டின் மீது கனமாக பூசி, நெல் உமியில் தீவைத்து அது கழன்று வரும் போது பூண்டை அதில் சொருகி சுட்டு எடுத்து, தூசுகள் இல்லாமல் அகற்றி அம்மியில் வைத்து ஒன்றாக அரைத்து 5கிராம் அளவு தயிரில் அதிகாலையில் வெறும் வயிற்றில் குடிக்கவேண்டும். இவ்வாறு 3 நாட்கள் தொடர்ந்து சாப்பிட சீதபேதி தீரும்.

♦ **புண் ஆறுவதற்கு** : வெள்ளைப்பூண்டு, ஊமத்தம் வேர், வசம்பு ஆகிய மூன்றையும் எடுத்து 50 கிராம் சம அளவு எடுத்து ஒன்றாக நசுக்கி 500 மில்லி நல்லெண்ணெய்யில் போட்டு அடுப்பிலிட்டு காய்ச்சி எண்ணெய் கொதித்து சிவக்கும் தருணத்தில் இறக்கி ஆறவிட்டு கண்ணாடி புட்டியில் பத்திரப் படுத்தி ஆறாத புண்கள் மீது தொடர்ந்து தடவிவர புண்கள் ஆறும்.

♦ உடல் சருமத்தில் சிறுசிறு சிவந்த கொப்புளங்களாக இருந்து, நீர்வடிந்து, புண்ணாகி இருப்பதற்கு,

வெள்ளைப்பூண்டு, வசம்பு, புங்கம்பூ, சீரகம், நன்னாரிவேர் ஆகிய 5 சரக்குகளிலும் ஒவ்வொன்றிலும் 30 கிராம் வீதம் எடுத்து பசும்பால் விட்டரைத்து சுத்தமான ஆமணக்கு எண்ணெய் 400 மில்லி எடுத்து, அரைத்து வைத்திருக்கும் சரக்கினை அதில் போட்டு கலக்கி அடுப்பிலிட்டு காய்ச்சும்போது, மருந்து சரக்குகளின் சடசடப்பு ஓசை அடங்கும். பின்பு சிறிதுநேரம் கழித்து எண்ணெயை இறக்கி வடிகட்டி பத்திரப் படுத்தவும். வளர்ந்தோர் வேளைக்கு 1 தேக்கரண்டி எடுக்க வேண்டும் மலம் இளகிவெளியேறும். இலேசாக பேதியானால் மருந்து கொடுப்பதை நிறுத்தி விடவேண்டும்.

♦ **விஷவாத கரப்பானுக்கு** - அதாவது புண்களில் கொப்புளம், நீர்வடிதல், வீக்கம் காணப்படின் வெள்ளைப்பூண்டும், வசம்பும் ஒவ்வொன்றிலும் 30 கிராம் அளவு எடுத்து வெங்காயம் 20 கிராம், பூவரசம்பூ, நெல்லிமுள்ளி (உலர்ந்த நெல்லிக்கனி) ஆகியவற்றின் சாம்பல் ஒவ்வொன்றும் ஒரு கைப்பிடியளவு எடுத்து எல்லாவற்றையும் அம்மியில் இட்டு ஆடு தீண்டாப்பாளைச் சாறுவிட்டு ஒன்றாக அரைத்து. அரைத்த சரக்கை 400 மில்லி ஒலிவ்வெண்ணெயிலிட்டுக் காய்ச்சி நீர்ச்சட்டப்பு அடங்கி வரும் வரை காய்ச்ச வேண்டும். எண்ணெய் சிவந்து வரும் போது இறக்கிவடிகட்டி ஆறவிட்டு கண்ணாடி புட்டியில் அடைத்து பாதிக்கப்பட்ட தோல்பகுதிக்கு எண்ணெயை தொடர்ந்து தடவிவர நல்ல குணம் கிடைக்கும்.

♦ பாரிசவாயு, மூலவாயுவிற்கு

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

நல்ல தரமான வெள்ளைப்பூண்டை தோல் நீக்கி சுத்தம் செய்து 50 கிராம் அளவு எடுத்து பசும்பால் விட்டரைத்து, வேர்க்கொம்பு, மிளகு, திப்பிலி, சீரகம், பெருங்காயம், ஓமம் ஆகிய சரக்குகள் ஒவ்வொன்றிலும் 30 கிராம் அளவு சேர்த்து பொடித்து பசும்பாலில் சேர்த்தரைத்து பூண்டில் தூவி ஒன்றாக தணலில் வைத்து கடைந்து 5 கிராம் அளவு காலை, மாலை தொடர்ந்து 40 நாட்கள் கொடுக்க பாரிசவாயு, மூலவாயு போன்றன நன்கு தணியும்.

(தொடரும்)

# வடக்கு-கிழக்கு இளைஞர்களுக்கு என்.டி.பி. வங்கியின் 'ஜீவன' வாழ்க்கை மேம்பாட்டு முன்னோடித்திட்டம்

'போர் நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் அபிவிருத்தியடைந்துவரும் இலங்கையில் பொருளாதார மீளமைப்பு நடவடிக்கைகளிற்குரிய உத்வேகம் கொடுக்கும் வகையில், இளைஞர், யுவதிகளுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, NDB வங்கி "ஜீவன" வாழ்வாதாரப்பயிற்சி மற்றும் கடன் திட்டத்தினை பெருமையுடன் அங்குரார்ப்பணம் செய்துள்ளது. குறித்த இந்த முன்னோடித் திட்டமானது , தொழிற்துறையில் ஒருபுதிய முயற்சியாக கருதப்படுவதுடன் , இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள 18 தொடக்கம் 35 வயது வரையான இளைஞர், யுவதிகளை இலக்கு வைத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்படும் குறித்த இந்த குழுமத்தினரின்வாழ்வாதாரத்திற்கு வாய்ப்பு வழங்குவதோடு மட்டும் நின்று விடாமல் , NDB வங்கியின் "ஜீவன" வாழ்வாதார பயிற்சி மற்றும் கடன் திட்டமானது, இந்த இளைஞர் குழாமிற்கு, தெரிவு செய்யப்பட்ட பொருத்தமான தொழில்துறைப்பயிற்சி ஒன்றினை வழங்கி, அவர்களின் திறன்களை சிறப்பான விதத்தில் மேம்படுத்தி , உள்நாடு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை ஏற்றுக் கொள்ளும்படியான தகைமைகளை அடையும் வகையில் பயிற்சியும் அளிக்கின்றது.

தற்காலத்திலும் எதிர்காலத்திலும் எந்த வகையான தொழில்துறைகளுக்கு தொழில் சந்தையில் கேள்வி இருக்கும் என்பதை கண்டறிந்துள்ள NDB வங்கியானது, "ஜீவன" வாழ்வாதாரப்பயிற்சி மற்றும் கடன் திட்டத்தினை, விருந்தோம்பல், மோட்டார் மெக்கானிக்கல் துறை,கட்டட நிர்மாணம், தாதிய சேவை ஆகிய துறைகளில் பாண்டித்தியம் பெற விரும்பும் இளைஞர், யுவதிகள் மத்தியில் முன்னெடுக்கவுள்ளது.

வங்கியானது, குறித்த துறைகளில் நிபுணத்துவம் மிக்க தொழில்துறை முதல்வர்களுடன் தொடர்பு கொண்டு ,தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு, அவர்கள் விரும்பிய துறையில்,தேவையான கல்வி சார் பயிற்சிகளையும், செயன்முறைப் பயிற்சிகளையும்,மொத காலத்திற்குள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

NDB வங்கியின் "ஜீவன" வாழ்வாதாரப் பயிற்சி மற்றும் கடன் திட்டமானது ,குறித்த தொழில் துறை முதன்மை நிறுவனங்கள் வழங்கும் பயிற்சித்திட்டத்துடன் கைகோர்ப்பதன் ஊடாக ,வெறும் கல்வித் தகைமையை மட்டும் வழங்காமல் ,முழுமையான தொழில் அறிவுக்கான அத்திவாரத்தினை குறித்த பயிற்சியில் ஈடுபடுபவர்கள் பெற்றுக்கொள்வதனை உறுதி செய்கின்றது.

"ஜீவன" கடனானது ,இதனை பெற்றுக் கொள்பவர்,பயிற்சியாளர்களுக்கான கட்டணம் ,தொழில்பொருட்கள் ,தேவையான உபகரணங்கள்,சீருடைகள் மற்றும் பாதுகாப்பு கவசங்கள் ஆகியவற்றுக்கு வேண்டிய பணம் ஆகியவற்றுடன் ,நாளாந்தப்படி அடிப்படையில் பிரயாணம் ,உணவு மற்றும் ஏனைய சிறு செலவுகளுக்கான பணத்தினையும் வழங்குகின்றது. இதன் மூலம் NDBவங்கியின் "ஜீவன" வாழ்வாதாரப்பயிற்சி மற்றும் கடன் திட்டத்தினை பெற்றுக்கொள்பவர்கள் ,முழுமையான அனுகூலங்களை பெற்றுக்கொள்ள வழி அமைக்கின்றது.

இது தொடர்பில் NDB வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரசல் டி மெல் கருத்துரைக்கையில்,

"வடக்கு, கிழக்கில் உள்ள இளைஞர், யுவதிகளை இலக்கு வைத்து அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் "ஜீவன" வாழ்வாதார பயிற்சி மற்றும் கடன் திட்டமானது ,வாழ்வாதாரத்திற்கான தொழில் பயிற்சியுடன்,தேவையான கடன் வசதியையும் அளிக்கின்றது.

இந்தக் கடன் திட்டமானது,நெகிழ்வுத்தன்மை மிக்க மீள் செலுத்தும் காலம் மற்றும் சகாய வட்டியுடன் வழங்கப்படுவதனால் குறித்தபகுதியில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு மிகப்பெரும் அனுகூலமாக அமையும்.

ஒவ்வொரு பயிற்சி மற்றும் கடன் தொகைக்கான தெரிவு ,குறித்த விண்ணப்பதாரி ,பயிற்சி நெறியினை முழுமையாக பூர்த்தி செய்யும் வகையில் ,அவர் தெரிவு செய்த தொழிற்பயிற்சியில் கொண்டுள்ள திறனின் அடிப்படையில் அமையும்."

"இந்த கடன் திட்டமானது ,அபிவிருத்தி அடைந்துவரும் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியத்தில் மனித வளத்தினை மேம்படுத்தும் NDB வங்கியின் அர்ப்பணிப்புமிக்க திட்டத்தின் ஒரு பகுதியே ஆகும்.

இலங்கை வாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கு மேலும் பெறுமதி சேர்க்கக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளைக் கண்டறிவதனை வங்கி தனது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இவற்றினை செய்யக்கூடிய இளைஞர்களுக்கு எமது இந்தத் திட்டமானது முழுமையாக சகாயமளித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதுடன் ஸ்திரமான எதிர்காலத்தை வழங்க வேண்டும் என்பதே எனது நோக்காகும் " என குறிப்பிட்டார்.

வர்த்தக முயற்சியாண்மை மற்றும் கூட்டாண்மை , சமூகப் பொறுப்புணர்வு ஆகிய வங்கியின் செயற்திறன் நடவடிக்கைகளின் ஒரு அங்கமான இந்த திட்டமானது இளைஞர்கள் தமது கனவினை நிறைவேற்றுவதற்கு அவர்களது தொழிற்திறமை மேம்படுத்தும் வகையில் களம் அமைத்துக் கொடுப்பதற்காக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

கற்றல் மற்றும் பயிற்சி வாய்ப் புகள் ஒருங்கே வழங்கப்படுவதானது பயிற்சி பெறும் இளைஞர்கள் தமது திறமைகளை வளர்த்தவாறே தொழிற்திறனை பட்டை தீட்டுவதற்கு உதவியளிக்கும்.


NDB வங்கியானது இலங்கையின் பல வெற்றிகரமான நிறுவனங்களுக்கு பக்கபலமாக விளங்கியதுடன் நாட்டின் தொடர்ச்சியான மேம்பட்ட அபிவிருத்திப் பாதைக்கு தொழிற்துறைக் கலாசாரமே துணை நிற்கும் என்ற திடமான நம்பிக்கையினைக் கொண்டுள்ளது. இலங்கையின் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் இளைஞர், யுவதிகள் தமது வர்த்தக முயற்சியாண்மை செயற்திறனை நிரூபித்துள்ளனர்.

இதனை கருத்திற் கொண்டுள்ள NDB வங்கியானது இவர்களின் வர்த்தக முயற்சியாண்மை திறன்களை மேம்படுத்தும் உறுதியினை கொண்டுள்ளதுடன் அவர்களுக்கான நிதி வசதியினை வழங்குவதனை தமது கடப் பாடாக கொண்டு இலங்குகின்றது.

**விளம்பர விபரணம்**

# ஈழத்தமிழர்கள் நிலை குறித்து கம்பன் கழக விழாவில் பேச்சு

## கண் கலங்கினார் ரஜனிகாந்



சென்னை கம்பன் விழாவில் ஈழத் தமிழர் நிலை பற்றிய பேச்சை கேட்டு நடிகர் ரஜினிகாந் கண்கலங்கினார்.

கம்பன் கழகம் சார்பில் 36 ஆவது ஆண்டு கம்பன் விழா சென்னை மைலாப்பூரில் உள்ள ஏ.வி.எம்.ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் 3 நாட்கள் நடைபெற்றது. இறுதி நாளன்று, "கம்பன் புலமை, திருவள்ளுவர் வழியில் பெரிதும் வெளிப்படுவது அறத்திலா, பொருளிலா, இன்பத்திலா" என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது.

இப்பட்டிமன்றத்தில் இலங்கையைச் சேர்ந்த ஜெயராஜ் பேசியதாவது, நானும் தமிழன்தான்.... ஆனால் அயல்நாட்டுக்காரன். நான் சுதந்திரமானவனா? ஒருவன், மற்றொருவரை சுதந்திரமாக நடமாடவிடும் போதுதான், சுதந்திரமாகப் பேச, செயற்பட விடுவதுதான் உண்மையான சுதந்திரம். அந்த சுதந்திரமில்லாத நாட்டின் குடிமகன் நான். ஆனாலும் என் எல்லையை உணர்ந்து உங்கள் சுதந்திரத்தை வாழ்த்துகிறேன்.

ஒருவன் கோடிக் கோடியாகச் சம்பாதிக்கலாம், வெற்றி பெறலாம். ஆனால் அறமில்லாத வெற்றி தூக்கத்தைத் தராது. அறமாக வாழ்ந்தால் சொர்க்கத்துக்கு போகலாம். ஆனால், சொர்க்கத்துக்கு போனவர்கள் யார் யார் என்று யாருக்கு தெரியும்.... காந்தி, அண்ணா, காமராஜர், எம்.ஜி.ஆர். என்று நாமாகச் சொல்லலாம். ஆனால் பார்த்தவர்கள் யார் என்றார்.

இந்தப் பேச்சை மேடைக்கு முன்வரிசை இருக்கையில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார் ரஜினிகாந்த்.

ஈழத் தமிழரின் சுதந்திரமற்ற நிலை பற்றிய அந்தப் பேச்சைக் கேட்டதும் கண் கலங்கினார் அவர். சிறிது நேரம் மேடையைப் பார்த்துக் கொண்டிருந்தவர் பின்னர் கண்களைத் துடைத்துக் கொண்டார். (5-4)

# புதிய துணைக்கோள்கள் கண்டு பிடித்து இந்திய மாணவர்கள் சாதனை

(புதுடில்லி)

அமெரிக்காவின் நாசா நடத்திய புதிய துணை கோள்கள் கண்டுபிடிக்கும் திட்டத்தில் டில்லியில் +2 படிக்கும் 2 மாணவர்கள் சேர்ந்து புதிய துணை கோள் ஒன்றை கண்டுபிடித்துள்ளனர்.

இந்த துணை கோளை கண்டுபிடித்தவர்கள் டில்லியில் தனியார் பள்ளியில் +2 படிக்கும் அமன்ஜோத் சிங் மற்றும் ஷாகில் வத்வா ஆவர். இவர்கள் கடந்த 6 ஆம் திகதி கண்டுபிடித்த துணைகோளுக்கு 2010 .24 என பெயரிடப்பட்டுள்ளது.

துணை கோள்களை கண்டுபிடிக்கும் திட்டம் கடந்த மே 17 முதல் ஜூன் 30 வரையிலுள்ள ஜூலை 1 முதல் ஆகஸ்ட் 13 ஆம் திகதி வரையிலும் நடந்தது. கடந்த 11 நாடுகள் கலந்து கொண்ட துணை கோள்களை கண்டுபிடிக்கும் திட்டம் முதன்முறையாக தற்போது இந்தியாவிலும் நடத்தப்பட்டது.

இதில் 30 முதல் 45 பள்ளிகள் கலந்து கொண்டன. தற்போது புதிதாக கண்டு பிடிக்கப்பட்ட புதிய துணைக்கோள் மற்ற கோள்களை போல் சூரியனை சுற்றி வருவதும், இது மார்ஸ் மற்றும் ஜுபிடர் கோள்களுக்கு இடையிலும் அமைந்திருப்பதும் தெரியவந்துள்ளது.

புதிய துணை கோள் கண்டுபிடிப்பு குறித்து பேட்டியளித்த ஷாகில், தங்களது கண்டுபிடிப்பு மூலம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், தினந்தோறும் தங்களது ஆராய்ச்சி குறித்து நாசா விஞ்ஞானிகளுக்கு தகவல் அனுப்பி வருவதாகவும், அவர்கள் தங்களது வெற்றி குறித்து தெரிவித்ததாகவும் கூறினர். (4-6)

# ஈரானில் தற்கொலைத் தாக்குதல் 41 பேர் உயிரிழப்பு; 100 பேர் காயம்

ஈராக்கிலுள்ள இராணுவத்திற்கு ஆட்களைத் திரட்டும் நிலையமொன்றில் நேற்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 41 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் சுமார் 100 பேர் காயமடைந்துள்ளதாகவும் அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக் தலைநகர் பக்தாத்திலுள்ள இராணுவத் தளமொன்றிலேயே இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாதக் கடைசிப் பகுதியில் மோதல் நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை அமெரிக்கப்படைகள் முன்னெடுத்து வருகின்ற நிலையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கில் 2006 ஆம் ஆண்டுக்கும் 2007 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் ஜூலை மாதத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4)

# மராட்டியம்,அந்தமானில் நேற்று இலேசான நிலநடுக்கம்

சமீப காலமாக அந்தமான் தீவுகளில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுகிறது. இந்த நிலையில் நேற்று காலை 7.09 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின.

இதனால் பொது மக்கள் அச்சம் அடைந்தனர். வீடுகளை விட்டு ஓட்டம் பிடித்தனர். வீதிகளில் சிறிது நேரம் தங்கியிருந்தனர். பதட்டம் தணிந்ததும் மீண்டும் வீடுகளுக்கு சென்றனர். இந் நிலநடுக்கம் அந்தமான் தீவுகளில் பூமிக்கு அடியில் 10 கி.மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளதாகவும் ரிக்டர் அளவில் 5.2 ஆக பதிவாகியுள்ளதாகவும் வானிலை ஆராய்ச்சித் துறை அறிவித்துள்ளது. (4)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
27.12.1923



மறைவு
16.08.2010

## விஸ்வநாதன் முருகேசு

எம் வர்த்தக வாழ்விற்கு வழிகாட்டிய நாயகனே வர்த்தக பெயருடன் புகழ் பூத்த S.V.M நாமப் பெருமகனே வர்த்தக உலாவின் வியக்கத்தக்க சாதனை படைத்த நாயகனே யாழ் நகர் மக்கள் வளமுடன் வாழ்ந்திட வர்த்தக தர்மத்தை வளர்த்திட்ட பெருமகனுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை யாசிக்கின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆறுதலை தெரிவிக்கின்றோம்.

இ.ச.பே நாகரத்தினம் சக நிறுவனம்
52, 54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கஜமுகன் ஹாட்வெயார்
147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-884)

ஒரு மனிதனுடைய செயல் அவனுடைய - பெருமை அல்லது சிறுமையின் உரைகல்.

~ இந்தியா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாழ்ப்பாணத்தின் அவலத்தைக் காட்டும் வர்ணங்கள்-எண்ணங்கள்

யாழ்ப்பாணம் இன்று வரை பழைய பெயரில் ஓடிக் கொண்டிருக்கின்றது. அந்தளவுக்கு யாழ்ப்பாணத்தின் பழைமையின் பெருமை யுள்ளது.

தனித்து கல்வியில் மட்டுமன்றி பல்துறை சார்ந்த பேராளர்களாகவும், ஒப்புரவாளர்களா கவும் யாழ்ப்பாணத்தவர்கள் இருந்தனர்.

அந்த உயர்நிலை இருந்தமையால்தான், சேர் பொன் இராமநாதன் அவர்கள் சிங்கள வர்களைக் காப்பாற்றினார்.

எனினும் அந்த நன்றியைச் சிங்களவர்கள் மறந்து போயினர். அவர்கள் அதனை மறக்கா மல் இருந்திருப்பார்களாயின் சேர் பொன் இராம நாதனைச் சிங்கள மக்கள் தோளில் தூக்கிய காட்சியை பழைய நாடாளுமன்றத்திலிருந்து அகற்றியிருக்க மாட்டார்கள்.

பரவாயில்லை. உயர்ந்தவர்களின் உயர்ந்த பண்பை அறிந்து கொள்வதற்கும் உயர்ந்த மன நிலை அவசியம். அந்த மன நிலை இல்லாத வர்களிடம் அதனை எதிர்பார்ப்பது அர்த்தமற் றது.

அந்த வகைக்குள் சேர் பொன் இராமநாதன் அவர்கள் சிங்கள மக்களுக்குச் செய்த உதவி யையும் உள்ளடக்கிக் கொள்ளலாம்.

இவை பற்றி எல்லாம் பேசி உங்கள் நேரத் தை வீணடிப்பது நாகரிகமல்ல என்பதால் அத னை அப்படியே விட்டுவிடலாம்.

ஆனால் எங்கள் யாழ்ப்பாணத்தின் பழைய பெருமைகள் இப்போது முற்றாகத் தேய்ந்து விட்டதை நினைக்கும் போதுதான் மனம் வெதும் புகின்றது.

இலங்கைத் தீவின் மரியாதைக்குரிய இட மாக இருந்த யாழ்ப்பாணம்; நாகரிகம், பண் பாடு, பழக்கவழக்கம், கல்வி, சமூகப் பெறுமா னம் என்பவற்றின் உயர் பீடமாக இருந்தது.

யாழ்ப்பாணத்தவர்களின் நடை, உடை, பாவ னைகளைப் பார்த்து அவற்றைப் பின்பற்ற வேண்டும் என்ற நினைப்பு ஏற்பட்ட காலம் உண்டு.

ஆனால் இப்போது யாழ்ப்பாணத்தில் வீடுக ளுக்கும், நிறுவனங்களுக்கும் பூசப்படும் வர் ணங்களைப் பார்க்கும் போது யாழ்ப்பாணத் தாரின் பின்தங்கிய நிலை பளிச்சிடுகின்றது.

சில நிறுவனங்கள் இறைச்சிக் கடைக்குரிய வர்ணங்களைக் கூடப் பூசியுள்ளன. ஏன் இப் படியொரு அவல நிலை?

மேற்குலக நாடுகள் பொதுவான-எளிமை யான வர்ணங்களை ஏற்றுக் கொள்ளும் போது-யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற சர்வ தேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மிகவும் நேர்த்தியான பண்பான வர்ணங்களைத் தங் கள் அலுவலகங்களுக்குப் பூசியிருக்கும் போது,

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனங்கள் அநாகரிகமான-பார்க்கவே அருவருப்பான வர்ணங்களைப் பூசுவது எதற்காக?

ஏனைய இடங்களில் விலைபோகாத வர் ணங்களை இங்கு விற்றுத் தீர்ப்பதற்காகவா?

அறிவியலும் விஞ்ஞானமும்-தகவல் தொழில் நுட்பமும் உச்சம் பெற்ற இக் கால கட்டத்தில் இப் படியான வர்ணங்களைப் பூசுவது சமகால யாழ்ப்பாணத்தவர்களின் எண்ணங்களையே எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது.

# இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி நிலை பின்தங்கியுள்ளது

## மாகாணக் கல்வித் திணைக்கள தகவல்கள் தெரிவிப்பு

வன்னியில் இடம்பெயர்ந்த மாணவர்களின் கற்றல் நட வடிக்கைகள் சிலவருடங்கள் பின்தங்கியுள்ளதாக மாகாணக் கல்வித்திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுத்தம் காரணமாக கடந்த இரண்டு வருடங்களில் 36 ஆயிரம் பாடசாலை மாணவர்கள் அகதிகளாயிருப்பதாக வடமாகாண கல்விப்பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மாண வர்களே அதிகளவில் இடம்பெயர்ந்துள்ளனர். சுமார் 32 ஆயி ரம் மாணவர்கள் இந்த இரண்டு மாவட்டங்களிலும் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் வசித்து வந்ததால் இந்த மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் சில வருடங்கள் பின்தங்கியுள்ளனர்.

இதனால் குறித்த மாணவர்களை இலக்காகக்கொண்டு துரித கல்வி மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை முன்னெ டுப்பது அவசியமானது என வடமாகாணக்கல்விப் பணிப்பாளர் அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது. வடபகுதிகளில் மீள் குடி யேற்றப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் சுமார் 4 ஆயிரம் மாணவர்கள் தொடர்ந்தும் முகாம்களிலேயே வசி த்து வருகின்றனர். (ச)

# ஜி.எஸ்.பி. வரிச் சலுகை நீக்கப்பட்டதற்கு ரணிலும் புலம்பெயர் தமிழர்களுமே காரணம்

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையை இலங்கை இழந்தமைக்கு தொழிலாளர்கள் உரிமைமீறல்கள் எதுவும் காரணம் இல்லை. ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மங்கள சமரவீர மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினரின் பிர சாரங்களே இதற்கு காரணம் என அரசாங்கம் கூறியுள்ளது.

சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சுனாமியின் பின்னர் 2005 ஆம் ஆண்டிலிருந்து 5 வருட காலம் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை இலங்கைக்கு கிடைத்து வந்தது. ரணில், மங்கள மற்றும் நாடு கடந்த தமிழீழ அரசை நிறுவும் கனவிலுள்ள சில தமிழ்க் குழுக்கள் ஆகியனவற்றின் அரசாங்கத்திற்கு எதிரான சேறு பூசும் பிரசாரங்களின் பின்னரே தொழிலாளர் உரிமைகள், மனித உரிமைகள் மற்றும் நல்லாட்சி குறித்து ஐரோப்பிய ஒன்றி யம் கேள்வி கேட்க ஆரம்பித்தது.

சரத் பொன்சேகாவின் வெள்ளைக் கொடி கதையின் பின்னர் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு கடும் அழுத்தம் கொடுத்து பின்னர் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை வாபஸ் பெற்றது என அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறினார்.

எதிர்க்கட்சி, புலம்பெயர்ந்த தமிழர்கள் சிலர் மாத்திரமே ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை இலங்கை இழந் தமை குறித்து மகிழ்ச்சியடைகின்றனர். ஆடைத் தொழிற்றுறையில் வேலை வாய்ப்பு பெற்ற கிராமிய இளைஞர், யுவதிகளே இதனால் பாதிப்படைவர். சில மில்லியன் யூரோக்களுக்காக நாட்டின் இறை மையும் சுயமரியாதையையும் ஒருமைப்பாட்டையும் விட்டுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராகவில்லை எனவும் அவர் கூறினார். (ச-5)

# கண்டாவளை மக்களை பதிவு செய்ய அறிவித்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தற்காலிகமாக வெளி மாவட்டத்தில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் வசித்துவரும் பூநகரி மற்றும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைவரும் தங்கள் தற்காலிக பதிவுகளை உரிய பிரதேச செயலகங்களில் நீக்கம் செய்து மீள்குடியமர்விற்காக எதிர் வரும் 31 ஆம் திகதி க்கு முன் பூநகரி, கண்டா வளைப் பிரதேச செயலகங்களில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

குறித்த திகதிக்குப் பின்னர் இப்பிரதேச செயலகங்களில் மீள் குடியேற்றப் பதிவினை மேற்கொள்பவர்களுக்கு எதுவித நிவா ரணமும் வழங்கப்படமாட்டாது என கிளிநொச்சி மாவட்ட அர சாங்க அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச-4)

# 88ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையினால் நடத்தப்படும் 88ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் பத்து மணிக்கு கூட்டுறவு வீர சிங்கம் மண்டபத்தில் சபையின் தலைவர் இ.இராஜராம் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத் தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச் சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாநகரசபை முதல்வர் திரு மதி யோகேஸ்வரி பற்குணராசா, இலங்கை தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவர் பந்நரணவக, யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்க பதிவாளருமான எஸ். அருள்ராஜ், யாழ்.கூட்டுறவுஅபிவிருத்தி உதவி ஆணையா ளர் கே.அருந்தவநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ள னர்.

தொடர்ந்து கூட்டுறவுத்தினப் போட்டிகளில் முதல் இடம் பெற்ற இராமநாதன் கல்லூரி மாணவிகளின் குழுப் பாடல், மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்க ஸ்ரீஅம்பாள் முன்பள்ளி மாணவர்களின் குழு நடனம், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத் தின் வாழ்க வளமுடன் நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (4)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாம வலயத்திற்கு உட்பட்ட யா/ஏழாலை சைவமகாஜன வித்தியாலயத்திற்கு அதிபர் பதவி வெற்றிடமாகின்றது. இலங் கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம்.

மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவ லகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்பு வோர் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 27.08.2010 ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவல கத்திற்கு அனுப்பிவைக்குமாறு வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

# சொற்பொழிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடக்கு அருள்மிகு ஆதிசிவ வீரபத்திர சுவாமி ஆலய அலங்கார உற்சவத்தையொட்டி நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று புதன் கிழமை தொண்டர் தம் பெரு மை என்னும் விடயம் பற்றி ஆசிரியர் அ.வாசுதேவா சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (4-29)

# சுவாமி விவேகானந்தரின் ஆசிமொழிகள்



★ எந்த வித சுயநல நோக்கமும் இல்லாமல் பணம், புகழ் எதிலும் கவ னம் செலுத்தாமல் நன்மை செய்ய வேண்டும் என்று மட்டும் எண்ணம் கொண்டவன் எவனோ அவன் புத்தரைப் போல மேன்மையானவன் ஆவான்.

இந்த உலகத்தையே மாற்றி அமைக்கும் வல்லமை அவ னிடத்தில் இருந்து எப்போதும் வெளிப்பட்டுக் கொண் டிருக்கும்.

★ உன்னால் ஒருவருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாக சேவை மட்டுமே செய்ய முடியும். உயிர்கள் யாவும் கடவுளின் குழந்தைகள். கடவுளின் குழந்தைக்கு தொண்டு செய்யும் பாக்கியத்தைப் பெற்றவர்கள் ஆண்டவனுக்கே சேவை செய்தவர்களாவர்.

★ நம்மைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பது சுய நலமும், மிகப்பெரிய பாவமுமாகும். எல்லாப்பொருளும் எனக்கே வேண்டும் என்று நினைப்பவன் மிகக்கேவலமான வாழ்க்கை வாழ்கிறான். நானல்ல; எல்லாம் நீயே என்று மற்றவர்களுக்காக வாழ்பவன் வாழ்க்கை கடவுளின் அன்பைப் பெறுகிறான்.

★ இந்த உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல. வெற்றியோ தோல்வியோ எதுவந்தாலும் கொண்ட கடமையில் முழுமையாக ஈடுபட்டு, வெற்றி பெறுவதற்காகவே நாம் பிறந்திருக்கிறோம்.





வடமாகாண விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் யாழ்ப்பாணம்செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்,யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.எவ்.ரூபசிங்கம் மற்றும் மாகாண விளையாட்டுத்துறைச் செயலாளர் அண்ணாத்துரை ஆகியோர் கலந்துகொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினர்.இந்நிகழ்வின் போது........

## யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடாத்தும்

## 2010ம் ஆண்டுக்கான சிறந்த அணி தரவரிசையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி முன்னணியில்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 2010ஆம் ஆண்டுக்கான சிறந்த கழக அணியை தெரிவு செய்யும் தரவரிசையில் கடந்த 15ஆம் திகதி வரை நடைபெற்று முடிந்த போட்டிகளின் பிரகாரம் யாழ். பல்கலைக்கழக அணி 30 புள்ளிகளைப் பெற்ற முன்னணியில் உள்ளது.

இந்த வரிசையில் முதல் 25 புள்ளிகளைப்பெற்ற அணி யாழ். பல்கலைக்கழக அணி என்பதுடன் 25 புள்ளிகளை 8 போட்டிகளில் பங்கு பற்றி பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் ஜெலிஸ்ரார் கழக அணி 23 புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்திலும் யாழ். சென்றல் கழக அணி 18 புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடத்திலும் கே.சி.சி.சி. கழக அணி 16 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்திலும் சிறி காமாட்சி கழக அணி 15 புள்ளிகளைப் பெற்று 5ஆம் இடத்திலும் அரியாலை சென்றல் கழக அணி 8 புள்ளிகளைப் பெற்று 6ஆம் இடத்திலும் ஈகிள்ஸ் கழக அணி 7 புள்ளிகளைப் பெற்று 7 ஆம் இடத்திலும் யாழ். ஜொனியன்ஸ் கழக அணி 6 புள்ளிகளைப்பெற்று 8ஆம் இடத்திலும் கிறாஸ்கொப்பர் கழக அணி ,யூனியன்ஸ் கழக அணி ஓல்கோல்ட் கழக அணி தலா 5 புள்ளிகளைப் பெற்று 9 ஆம் இடத்திலும் மானிப்பாய் பரிஸ்கழக அணி ,ஜங்ஸ்ரார் கழக அணி ,ஸ்ரான்லிக்கழக அணி தலா 3 புள்ளிகளைப் பெற்று 10ஆம் இடத்திலும் ,

சென்றலைக்கழக அணி ,பற்றீசியன் கழக அணிகள் தலா 2 புள்ளிகளைப் பெற்று 11ஆம் இடத்திலும் உள்ளன.

கூடிய புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப்பெறும் அணிக்கு துடுப்பாட்டம் தொடர்புடைய ஓர் பெரியோரின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசில் பத்தாயிரம் ரூபாவும் வழங்கப்படும் என யாழ். சென்றல் விளையாட்டுக்கழகத்தின் சிறந்த கழக அணியை தெரிவு செய்யும் குழு அறிவித்துள்ளது. (5)

## அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப்போட்டியில் வெற்றி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் அழைக்கப்பட்ட யாழ் மாவட்ட முன்னணிக் கழகங்களுக்கிடையிலான அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் சக்கோட்டை சென்சேவியர் அணி, நாவந்துறை கலைவாணி அணி மற்றும் உரும்பிராய் சென் மைக்கல் அணி வெற்றி பெற்றன.

இதில் கடந்த வெள்ளிக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்ற போட்டியில் புத்தூர் எவரஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோதிக் கொண்டதில் 7:4 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை அணியும் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் கரவெட்டி கலட்டி அணியை எதிர்த்தது சாக்கோட்டை சென்சேவியர் அணிமோதிக் கொண்டதில் 2:3 என்ற கோல் கணக்கில் சக்கோட்டை சென்சேவியர் அணியும் மேலும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடை பெற்ற போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய அணியை எதிர்த்து உரும்பிராய் சென்மைக்கல் அணி மோதிக் கொண்டதில் 4:3 என்ற கோல் கணக்கில் உரும்பிராய் சென்மைக்கல் அணியும் வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்ததக்கது. (6-24)

## இராகுலன் ,உத்தமக்குமரன் அதிரடி சென்றலைட் அணியை வீழ்த்தியதுகே.சி.சி.சி.

இராகுலன்,உத்தமக்குமரன் ஆகியோரின் அதிரடியான துடுப்பாட்டம் மற்றும் றோபேசனின் விக்கெட் வீழ்த்தும் பந்து வீச்சு ஆகியவற்றின் உதவியுடன் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினை 137 ஓட்டங்களால் வென்றது கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அவை அழைக்கப்பட்ட கழகங்களான கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம்,சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி பற்றீசியன் விளையாட்டுக்கழகம் ஆகிய அணி களுக்கிடையில் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியினை வருடா வருடம் நடத்துகின்றது.

ஒன்பதாவது தடவையாக இவ்வாண்டு மேற்படி போட்டிகளை தற்போது நடத்தி வருகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆட்டமொன்றில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினை கே.சி.சி.சி எதிர்த்து சென்ற லைட்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. ஆரம்ப விக்கெட்டினை 5 ஓட்டங்கள் எடுத்த வேளை இழந்தது.

இருந்தும் தொடர்ந்து வந்தவீரர்கள் சிறப்பாக ஆடி ஓட்டங்கள் குவித்தனர் இராகுலன், உத்தமக்குமரன் ஆகியோரின் அதிரடியான அரைச்சதம் மற்றும் உமாநாத், சசிகரனின் பொறுப்பான ஆட்டங்களின் உதவியினால் கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்பிற்கு 318 ஓட்டங்களைகுவித்தது.

துடுப்பாட்டத்தில் இராகுலன் 82 ஓட்டங்களையும் உத்தமக்குமரன் 80 ஓட்டங்களையும் உமாநாத், சசிகரன் முறையே 34 , 32 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பாக கோகுலன் 4 விக்கெட்டுக்களையும் திவாகர் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 319 ஓட்டங்கள் என்ற இமாலய வெற்றியிலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் தொடக்கம் முதல் 5 விக்கெட்டுக்களை இழந்து தவித்தது. 62 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்திருந்த அணியினை பின்வரிசை வீரர்கள் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையை எட்ட வைத்தனர். இருந்தும் வெற்றியிலக்கை அடைய முடியவில்லை.

இறுதியில் 42.1 ஓவர்களில் 181 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களால் தோல்வியடைந்தது சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம். துடுப்பாட்டத்தில் கோகுலன் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் சார்பாக றோபேசன் 4 விக்கெட்டுக்களையும் கிருபவன், நிரோஜன் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (5)

## இராகுலன் துல்லியமான பந்துவீச்சு கொக்குவில் இந்துக்கல்லூரி வெற்றி

இராகுலனின் துல்லியமான பந்து வீச்சினால் கந்தானை சென்.செபஸ்தியார் கல்லூரி அணியினை 9 விக்கெட்டுகளால் வென்றது கொக்குவில் இந்து கல்லூரி அணி.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப்பிரிவு கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடத்தப்படும் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளின் முதல் சுற்றுப் போட்டிகள் கடந்த மாதத்துடன் நடைபெற்று முடிந்தன.

முதல் சுற்றில் இருந்து இரண்டு பிரிவாக 6 அணிகள் யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டு தேசிய ரீதியிலான போட்டிகளில் விளையாட்டுகின்றன. ஒருபிரிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி,வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி ஆகிய அணிகளும் மற்றைய பிரிவில் சென்.ஜோண்ஸ் கல்லூரி கொக்குவில் இந்துக்கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகிய அணிகளும் விளையாடுகின்றன.

மேற்படி சுற்றுப்போட்டியினை ஆட்டமொன்று கந்தானை சென். செபஸ்தியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது கொக்குவில் இந்துக்கல்லூரி அணியினை எதிர்த்து கந்தானை செபஸ்தியார் இந்துக் கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற கொக்குவில் இந்துக்கல்லூரி அணி முதலில் சென். செபஸ்தியார் கல்லூரியினை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. அதற்கிணங்க களமிறங்கிய செபஸ்தியார் கல்லூரி அணி கொக்குவில் இந்துக்கல்லூரி வீரன் இராகுலனின் பந்துவீச்சினை எதிர்கொள்ள தடுமாறியது.

ஆரம்பம் முதல் விக்கெட்டுகளை இழந்து வந்த கந்தானை செபஸ்தியார் அணி 17.2 ஓவர்களில் 88 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும்இழந்தது . துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக பெரேரா 30 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பாக இராகுலன் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

89 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் இந்துக்கல்லூரி அணி ஒரு விக்கெட்டினை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் சிலோஜன் 35 ஓட்டங்களையும் பங்குஜன் இராகுலன் முறையே 32, 17 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இவ்வெற்றியினைத் தொடர்ந்து அடுத்த போட்டியாக தெஹிவளை சொப்ரானந்தா மகா வித்தியாலயத்துடன் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.

# ராண்டிவ் வேண்டுமென்றே நோபோல் வீசினார்-சேவாக் மன்னிப்புக் கோரியது இலங்கை கிரிக்கெட் சபை



(கொழும்பு)

தம்புள்ளயில் நேற்று நடைபெற்ற ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய வீரர் வீரேந்திர சேவாக் 99 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது இலங்கைப் பந்துவீச்சாளர் சுராஜ் ராண்டீவ் நோபோல் வீசியதன் மூலம் சேவாக் சதம்குவிக்கும் வாய்ப்பைப் பறித்தமை குறித்து இலங்கைக் கிரிக்கெட் சபை மன்னிப்புக் கோரிய தாக இந்திய அணி முகாமையாளர் ரஞ்ஜிப் பிஸ்வால் கூறியுள்ளார்.

அதேவேளை இவ்விடயம் தொடர்பாக சுராஜ் ராண்டீவ் தனது அறைக்கு வந்து மன்னிப்புக் கோரியதாக வீரேந்திர சேவாக் தனது ட்விட்டர் இணையத்தளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் 171 ஓட்டங்கள் எனும் இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 170 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது சேவாக் 99 ஓட்டங்களுடன் இருந்தார்.

இதில் சேவாக் சதம் குவிக்கவும் அணி வெற்றிபெறவும் ஒரு ஓட்டம் மாத்திரமே தேவைப் பட்டது. இந்நிலையில் பந்துவீசிய சுராஜ் ராண்டீவ் நோ போல் ஒன்றை வீசினார். அப்பந்தில் சேவாக் சிக்சர் அடித்தபோதிலும் நோபோல் மூலம் பெறப்பட்ட ஒரு ஓட்டத்துடன் போட்டி முடிபடைந்தது. இதனால் சேவாக் அடித்த சிக்சர் ஓட்டக்கணக்கில் சேர்க்கப்படவில்லை.

இந்நிலையில் தான் சதம் குவிப்பதைத் தடுப்பதற்காக வேண்டுமென்றே ராண்டீவ் நோபோல் வீசியதாக சேவாக் நேற்று முன்தினம் குற்றம் சுமத்தியிருந்தார். அவர்கள் (இலங்கை அணியினர்) விளையாட்டு மனப்பான்மையை வெளிப்படுத்தியிருக்க வேண் டும். அது வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை.

ஒரு வீரர் 99 ஓட்டங்களுடன் இருந்தால் நோபோல் வீசவேண்டும் என்பதில்லை. அதற்கு கிரிக்கெட்டில் இடமில்லை என சேவாக் தெரிவித்திருந்தார்.



இலங்கையணித்தலைவர் குமார் சங்கக்காரா கருத்துத் தெரிவிக்கையில், ராண்டீவ் வேண்டுமென்றே நோபோல் வீசினாரா என்பது தனக்குத் தெரியவில்லை எனக் கூறினார்.

ஆனால் அவ்வாறான நடவடிக்கைகளுக்கு கிரிக்கெட்டில் இடமளிக்க முடியாது. அவர் வேண்டுமென்றே அப்படிச் செய்திருந்தால் இது குறித்து அவருடன் பேசி இனிமேல் அப்படி நடைபெறாமல் பார்த்துக்கொள்வேன் எனவும் சங்கக்காரா கூறினார்.

இந்நிலையில் இலங்கைக் கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷந்த ரணதுங்க நேற்றுக் காலை தன்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மன்னிப்புக்கோரியதாக இந்திய அணி முகாமையாளர் ரஞ்ஜிப் பிஸ்வால் தெரிவித்துள்ளார்.

## பொன்சேகாவின் பதவியைப் பறிக்குமாறு பாதுகாப்புச் செயலர் வற்புறுத்தல்?

சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்து அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்காது போனால் தான் சகல பதவிகளையும் துறந்துவிட்டு நாட்டைவிட்டு வெளியேற போவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியிடம் உறுதியாகத் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொன்சேகாவின் ஜெனரல் பதவியைப் பறிப்பதற்காக தனது சித்தப்பாவான கோத்தபாய ராஜபக்ஷவே கடுமையான அழுத்தங்களை ஏற்படுத்தியதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ஷ நீலப்படையணியின் தலைவர்கள் சிலரிடம் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போது குறிப்பிட்டுள்ளார்.

முதலாவது இராணுவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அங்கீகாரம் வழங்கவேண்டாம் என தானும் தனது தாயாரும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்ததாகவும் தீர்ப்பை அங்கீகரிக்காது போனால் தான் அனைத்துப் பதவிகளையும் துறந்துவிட்டு வெளிநாடு செல்லப் போவதாக கோத்தபாய ராஜபக்ஷ கூறியதாகவும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## சைவப் புதல்வன் இதழ் வெளியீட்டு விழா

அகில இலங்கை சைவப்புலவர் சங்க சைவப்புலவன் இதழ் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதற்பிரதியினை யாழ்.பேரம்பலம் சக நிறுவனம் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், சிறப்புப் பிரதியினை பசுப்பாதுகாவலர் எஸ். சச்சிதானந்தமும் பெற்றுக் கொள்வார்.

அத்துடன் சைவப்புலவர் சங்கப் பொன்விழாவை முன்னிட்டு நடத்தும் போட்டிகளுக்கு விண்ணப்பித்த பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள் அதற்குரிய விடயங்களை நாளை 4 மணிமுதல் 6 மணிவரை நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் போட்டிகள் அடுத்த மாதம் 12 ஆம் திகதி வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக கௌரவ செயலாளர் சைவப்புலவர் கந்த சத்திய தாசன் அறிவித்துள்ளார். (ச-3)

## கொக்குவில் தாக்குதல் சம்பவம் குறித்து பொலிஸாரின் விசாரணை ஆரம்பம்

தென்பகுதி இளைஞர்கள் கொக்குவில் பகுதியில் வைத்து தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணை களை ஆரம்பித்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு கொக்குவில் அம்மன் வீதியில் வைத்து தென்பகுதி தளபாட வியாபாரி களான இளைஞர்கள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தினர். இதில் 3 இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தின் பின் அப்பகுதியில் பதற்ற நிலை காணப்பட்டதை அடுத்து அப்பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர்.

இந்நிலையில்நேற்றுவிசாரணைகளைஆரம்பித்த யாழ்ப்பாணப் பொலிஸார் தாக்கப்பட்டவர்களின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்தனர்.

இதேவேளை சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அண்மையிலுள்ள வீடுகளுக்கு சென்ற இராணுவத்தினர் விசாரணைகளைமேற்கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## வலி. வடக்கில் காலம் கடந்த பதிவுகளை மேற்கொள்வதற்கான நடமாடும் சேவை

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நீதி நியாயத்தைச் சமமாக அணுகும் கருத்திட்டமும் தெல்லிப்பழைப் பிரதேச செயலகமும் இணைந்து பிறப்பு, இறப்பு மற்றும் திருமணம் தொடர்பான காலம் கடந்த பதிவுகளை மேற்கொள்வ தற்கான முன்னோடி நடமாடும் சேவையினை நடத்தவுள்ளது.

இதுவரையில் மேற்படி பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் தமது பிரிவு கிராம சேவையாளருடனோ அல்லது தெல்லிப்பழை பிரதேச செயலக மேலதிக மாவட்டப் பதிவாளருடனோ தொடர்பு கொண்டு இவ் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாது பயன் பெறுமாறு பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜே/212, ஜே/213, ஜே/214, ஜே/227, ஜே/228, ஜே/229, ஜே/239, ஜே/244 மற்றும் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கும் கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் நாளை 19 ஆம் திகதி தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்திலும் ஜே/215, ஜே/216, ஜே/217, ஜே/218, ஜே/219, ஜே/220 ஆகிய கிராம சேவகர் பிரிவில் உள்ள மக்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அளவெட்டி மகாஜனாக் கல்லூரி மண்டபத்திலும்.

ஜே/221, ஜே/222, ஜே/223, ஜே/224 ஆகிய கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் இளவாலை கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் பதிவுகளை மேற்கொள்ளலாம் எனத் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ச)

## வடக்கிலிருந்து கடந்த ஒரு வருடத்தில் 4 ஆயிரத்து 763 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

வட பகுதி மக்களிடம் இருந்து கடந்த வருடம் மே மாதம் முதல் இதுவரை 4 ஆயிரத்து 763 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் உள்ள ஆணைக்குழுவின் கிளை அலுவலகங்களில் இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கிடைத்துள்ள முறைப்பாடுகளில் சுமார் 3 ஆயிரம் முறைப்பாடுகள் ஆட்கள் காணாமல் போனமை சம்பந்தமானது எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பாதுகாப்புத் தரப்பினரால் பலவந்தமாகத் தடுத்து வைத்துள்ளமை மற்றும் கைது செய்துள்ளமை தொடர்பாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனால் கிளிநொச்சிப் பாடசாலைகளுக்குப் போட்டோப் பிரதி எடுக்கும் இயந்திரம், கணனி மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில் சிறிதரன் எம்.பி. அக்கராயன் மகா வித்தியாலய அதிபர் மற்றும் மாணவர்களிடம் போட்டோப் பிரதி இயந்திரத்தையும் முழங்காவில் மகா வித்தியாலய அதிபரிடம் கணனிகளையும் மாணவி ஒருவருக்குக் கற்றல் உபகரணங்களைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

# இராணுவத் தொண்டர் படையணியில் கே.பியை இணைக்க அரசு திட்டம்?

## சதிமெத லங்கா பத்திரிகை தகவல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் சர்வதேச பொறுப்பாளராக செயற்பட்டுவந்த கே.பி. என்ற குமரன் பத்மநாதனை இராணுவத்தின் தொண்டர் படையணியில் இணைத்துக்கொள் வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக சதிமெத லங்கா பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

முப்படைகளின் தளபதியான ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் நிர்வாகத்துறை யுடன் சம்பந்தப்பட்ட கௌரவ பதவியை கே.பிக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

கே.பியின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு தேவையானஅடிப்படையை உருவாக்குவதே இதன் நோக்கம் எனக்கூறப்படுகிறது. இராணுவத்தின் தொண்டர்படையணியில் கே.பி. இணைத்துக் கொள்ளப்பட்டாலும் புலம் பெயர் தமிழர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருக்க கே.பிக்கு தடைவிதிக்கப்படமாட்டாது.

புலம் பெயர் தமிழர்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்காக கே.பி. வடமாகாண அபிவிருத்தித்திட்டங்களுக்கு பொறுப்பானவராக நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக பாதுகாப்புப்பிரிவுகளின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கே.பிக்கு இராணுவத்தில் கேணல் என்ற பதவிநிலைவழங்கப்படவுள்ளதாகவும் இதற்கு இராணுவத்தில் உள்ள உயர் அதிகாரிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது என அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# கனடா சென்ற ஈழ அகதிகளுக்கு நாடுகடந்த தமிழீழ அரசு உதவி

## அதன் பிரதிநிதிகள் தெரிவிப்பு

(கனடா)

ஈழத் தமழர்களின் அரசாக நாடு கடந்த தமிழீழ அரசு இருந்து வருவதால் எம்.வி. சன்.சி கப்பலில் கனடா வந்துள்ள ஈழ அகதிகளின் அவல நிலைமை குறித்து மிகுந்த கரிசனை கொண்டுள்ளனர் என்று அந்த அரசின் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின பாதுகாப்பு உறுதிப்படுத்தப் பட வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைளால் பாதிக்கப்பட்டு எதுவும் அற்ற நிலையில் ஏதிலிகளாக இவர்கள் வந்திருக்கிறார்கள்.

இந்த ஈழத் தமிழர்களுக்கு கனேடிய அரசு அவசியமான மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றமைக்கு நன்றி கனேடிய அரசினால் இம் மக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றமைக்கும் கனடாவில் தங்குகின்றமைக்குமான தகைமைகளைப் பெற்றுக்கொள்ள கொள்வதற்குமான செயற்பாடுகளிற்கு நாடுகடந்த அரசாங்கம் தன்னுடைய வளங்களையும் ஆதரவினையும் பயன்படுத்தும் உறுதிப்பாட்டினை கொண்டுள்ளது என அவர் கூறியுள்ளார். (ச-5)

# இன்னமும் அடையாளம் காணப்படாத...

சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தில் நேற்று நடைபெற்ற விசாரணையின் போது பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று சாட்சியமளித்தார். அதில் அவர் மேலும் கூறியதாவது.

வடக்குப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தொடர்பில் தானும் இலங்கை அரசும் அதிகபட்ச சந்தேகத்துடனேயே இருப்பதாகவும் அவர்களின் மனதில் விடுதலைப்புலிகள் மீது இன்னமும் அனுதாபம் இருக்கக்கூடும் என்று தாம் கருது வதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசிடம் சரணடையாத மக்கள் எத்தனை பேர் என்றோ அடையாளம் காணப்படாதவர்கள் எவ்வளவு பேர் என்றோ எமக்குத் தெரியாது.

அவர்களில் பலர் பல ஆண்டுகளாக விடுதலைப்புலிகளின் கொள்கைக்கு ஆதரவாக மூளைச்சலவை செய்விக்கப்பட்டவர்கள். அத்தகையவர்கள் தான் மிக மோசமான வகையினர்.

அத்தகையவர்கள் சிலர் அரச உத்தியோகத்தர்களாகவும் இருக்கலாம். அது மிகவும் ஆபத்தானது. அத்தகையவர்கள் அரசாங்கத்துடன் முழுமையாக இணைந்து செயற்பட மாட்டார்கள். பல்வேறு திட்டங்களுக்காக அரசு அளிக்கும் நிதி உள்ளிட்ட பல விடயங்களை அவர்கள் சரியாகக் கையாளாமல் போகலாம்.

கடைமட்ட அரச ஊழியர்களிடம் கூட இது நடக்கலாம். இப்படியான அடையாளம் காணப்படாத அரசிடம் சரணடையாதவர்கள் தான் தொடர்ந்தும் ஆபத்தானவர்களாக இருந்து வருகின்றார்கள்.

வடபகுதியின் காட்டுப்பகுதிகளில் இராணுவம் தொடர்ந்தும் மேலாதிக்கம் செலுத்தும். அதன் மூலம் மீண்டும் விடுதலைப்புலிகள் அங்கே மீண்டும் தலைதூக்காமல் தடுக்கப்படுவார்கள்.

இலங்கை அரசை விமர்சிக்கும் சர்வதேச விமர்சகர்கள் விடுதலைப்புலி உறுப்பினர்களின் இறப்புக்களையும் சாதாரண பொதுமக்களின் இறப்புக்களையும் ஒன்றாகக் கருதி குழப்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பேரின் இறுதிக்கட்டத்தில் ஆறாயிரம் இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 30ஆயிரம் பேர் காயமடைந்ததாகவும் அவர் கூறினார். இதேயளவு விடுதலைப்புலிகளும் கொல்லப்பட்டிருக்கக்கூடும் என்று நம்புவதாகவும் அவர் கூறினார்.

### கே.பியின் மனது மாற்றப்பட்டது

தற்போது இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் விடுதலைப்புலிகள் அமைப்பின் மூத்த உறுப்பினரான கே.பி. என்று அழைக்கப்படும் செல்வராசா பத்மநாதனின் மனதை இலங்கை இராணுவம் வெற்றிகரமாக மாற்றியமைத்துள்ளது.

கடந்த ஆண்டு மலேஷியாவில் கைது செய்யப்பட்ட கே.பி. இந்த ஆண்டு ஜூன் மாதம் வெளிநாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களின் குழு ஒன்று இலங்கைக்கு வந்தபோது அவர்களை சந்தித்துப் பேசினார்.

வன்முறைக் கொள்கைகளை கைவிடும் படி அரசாங்கம் அவரை வலியுறுத்தியதாகவும் வெளியான செய்திகளை கோத்தபாய உறுதிப்படுத்தினார்.

### பொதுமக்களின் ஆடை அணிந்து தாக்கிய புலிகள்

யுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் பொதுமக்களின் சாதாரண ஆடைகளை அணிந்து தாக்குதல் நடத்தினர்.

இதனால் பொதுமக்கைளையும் விடுதலைப் புலிகளையும் பிரித்து அறிவதில் சிக்கல் நிலைமை காணப்பட்டது.

இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்த சில தரப்பினர் யுத்த காலத்தில் தற்பாதுகாப்பிற்காக ஆயுதங்களை பயன்படுத்தினார். எவ்வாறெனினும் குறித்த குழுக்களின் ஆயுதங்கள் தற்போது களையப்பட்டுள்ளது.

கருணா, பிள்ளையான், ஈ.பி.டி.பி. மற்றும் புளொட் ஆகிய குழுக்கள் இவ்வாறு ஆயுதங்களை தரித்திருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

### வன்னியில் அமைப்பது இராணுவ தங்குமிடமே

இதேவேளை யுத்தம் முடிபடைந்த பின்னர் தமிழர் பூர்வீகமான வன்னியில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படும் கருத்துக்களை மறுத்துள்ள பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வன்னி பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருக்கும் இராணுவ வீரர்களுக்கான தங்குமிடங்களே அங்கு அமைக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

### சத்தி மிக்க புலிகள் அமைப்பு

விடுதலைப்புலிகள் மிகவும் சக்திவாய்ந்த போராட்ட அமைப்பு என்பதை நாம் முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்களிடம் இராணுவம், கடற்படை, விமானப்படை என முப்படைகளும் இருந்தன.

நாம் மிகவும் எளிதான அல்லது சுலபமான அமைப்பை வெற்றிகொள்ளவில்லை மிகவும் சக்திமிக்க பலம்வாய்ந்த 30 ஆயிரத்துக்கும் அதிகமான போராளிகளைக் கொண்ட அமைப்பையே வெற்றிகொண்டுள்ளோம்.

நடைபெற்று முடிந்த யுத்தத்தில் விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதுடன் அவர்களிடம் காணப்பட்ட பாரிய அளவிலான ஆயுதங்கள் விமானம் பீரங்கி உட்பட பலவும் அழிக்கப்பட்டுள்ளது.

இலங்கை படைத்தரப்பிலே 6 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதுடன் சுமார் 30 ஆயிரம் பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

ஆகவே இவ்வாறான அழிவை ஏற்படுத்திய விடுதலைப்புலிகளுக்கு எவ்வளவு இழப்பு நேர்ந்திருக்கும் என யாரும் கதைப்பதில்லை.

மாறாக யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மற்றும் கொல்லப்பட்ட மக்கள் குறித்தே அதிகமான பேசப்படுகின்றது என்றும் அவர் தனது சாட்சியத்தில் கூறினார். (ச-5)

# புலிகளின் ஆதரவாளர் தொடர்...

ஆழ்கடல் மீன்பிடி படகுகளை பயன்படுத்தி அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுக்கு சட்டவிரோதமாக ஆட்களை அனுப்பி வந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் இவர்கள் அண்மையில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் புலிகள் தமது செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக சந்தேக நபர்கள் நிதி சேகரித்து வந்தமை தெரியவந்துள்ளது.

புலிகளுடன் தொடர்புகளை கொண்டிருந்த இவர்கள் சர்வதேச ரீதியில் கொண்டிருந்த தொடர்புகளை கண்டறிவதற்காக சர்வதேச பொலிஸ் உதவியை பெற்றுக்கொள்ள உள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர். (ச-5)


## தரம் 05

**புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு!**

**ஒரு நற்செய்தி**

**2010ம் ஆண்டு 08ம் மாதம் 22ம் திகதி நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராக உள்ள மாணவர்களுக்கு பெரும் சிரமத்தின் மத்தியிலும்.**

**இறுதி நேரத்தில்**

**முற்றிலும் எதிர்பார்க்கக் கூடிய**

120/-

5 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்

(ஒரு மாதிரி வினாத்தாள் 80g பேப்பரில் 14 பக்கங் களை உடையது)

வினாத்தாள்களைப் பெற விரும்பும் பெற்றோர்கள் கீழ்வரும் புத்தக சாலைகளுடன் தங்கள் பதிவுகளை உடன் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| * பூபாலசிங்கம் | யாழ்ப்பாணம் | * அன்னை | யாழ்ப்பாணம் |
| * மொடேன் | நெல்லியடி | * செல்லாச்சி | பருத்தித்துறை |
| * பாக்யா | கொக்குவில் | * பொதிகை | சாவகச்சேரி |
| * துர்க்கா | சுன்னாகம் | * அருள்நாயகி | கொடிகாமம் |
| * வலம்புரி | வட்டுக்கோட்டை | * சாரங்கன் | யாழ். இந்துக் கல்லூரி மைதானத் திற்கு அருகில் |

பதிவு செய்யப்பட்ட புத்தகசாலைகளுக்கு இன்று பிற்பகல் 4 மணிக்கு வினாப் பொதி வழங்கப்படும். வினாத்தாள் தேவைப்படும் புத்தக சாலைகள் T.P.: 07784 48763, 021 3216922 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 12 மணித்தியாலத்தில் வினாத்தாள்கள் வழங்கப்படும்.

(2192) கொழும்பு எக்ஸ்பிறஸ் வெளியீடு


# மனிக் பாம் முகாமில் உள்...

என்று செட்டிகுளத்தில் உள்ள அந்த முகாமில் தங்கியுள்ள மக்கள் தன்னிடம் முறைப்பாடு செய்ததாகவும் அவர் கூறினார். முகாமில் தங்கி படிப்பைத் தொடருகின்ற மாணவர்கள் பலருக்கு இது தேர்வுக் காலம் என்பதாலும் குடும்பத் தலைவர்கள் கூலி வேலை பார்ப்பதற்காக வெளியில் சென்றிருப்பதாலும் இடமாற்றம் தங் களுக்கு சிரமங்களை ஏற்படுத்தும் என முகாம்வாசிகள் முறையிட்டுள்ளனர்.

ஒரு மாதம் கதிர்காமர் முகாமில் இருந்த பின்னர் தாங்கள் சொந்தப் பிரதேசங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படுவோம் என்று இராணுவ அதிகாரி கூறியுள்ளதாக மக்கள் என்னிடம் தெரிவித்தனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

அடிப்படை வசதிகளுக்கு பற்றாக்குறை நிலவும் ஒரு இடம் கதிர்காமர் முகாம் என்றும் அங்கே மக்கள் வெளியில் செல்வதற்கு இராணுவத்தினரின் முன் அனுமதியைப் பெற வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது என்றும் இப்படியான காரணங்களால் அங்கு இந்த மக்களை இடம்பெயரச் செய்வது நியாயமல்ல என்றும் அவர் வாதிட்டார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் மீள்குடியேற்றத் துறை பிரதியமைச்சர் கருணா ஆகியோரிடம் இப் பிரச்சினை குறித்து தான் உடனடியாக விளக்கியதாகவும் நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் தெரிவித்ததாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் குறிப்பிட்டார். (ச-3,5)

# முப்படைக் குழு...

அரசாங்கத்துடன் இணைந்து வைத்திய மற்றும் கட்டிட நிர்மாண பயிற்சிகளை இவர்கள் வழங்குகின்றனர். நேற்று முன்தினம் முதல் இவர்கள் தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர். புத்தளம், செட்டிக்குளம், அனுராதபுரம், மதவாச்சி ஆகிய இடங்களில் மருத்துவ மற்றும் பாடசாலை புனர்நிர்மாணப்பணிகள் போன்றவற்றில் இவர்கள் ஈடுபடுகின்றனர் என அமெ.தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-5)

# நல்லூர் கந்த...

இதனால் என்றுமில்லாதவாறு பெருமளவான பக்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் சன நெரிசலை கட்டுப்படுத்தவும் திருடர்களின் செயற்பாடுகளை நிறுத்தவும் அதிகளவான பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதனால் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பொலிஸ் பிரிவுகளிலிருந்தும் பொலிஸார் அழைக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என அவர் மேலும் கூறினார்.

இதேவேளை நல்லூர் கந்தன் ஆலய உற்சவகாலத்தில் தினமும் சுமார் 300 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ச-5)

# பொன்சேகா...

நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப் பினை ஜனாதிபதி கடந்த சனிக்கிழமை அங்கீகரித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# புலிகளின்...

தப்பட்டு வருவதாக தென் பிராந்திய கடற்படை கட்டளை அதிகாரி கொமாண்டர் ஆர்.டி பெரேரா தெரிவித்தார்.

மூவாயிரம் தொன் எடையுள்ள பொருட்கள் எடுத்துச் செல்லக் கூடிய இந்தக் கப்பலை எதிர்காலத்தில் வேறு தேவைகளுக்கும் பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் இலங்கை கடற்படை கூறியுள்ளது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.